Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, FEBRUARY 26, 2022

சனிக்கிழமை பெப்ரவரி 26, 2022 | ஒளி: 07 கதிர்: 242 | பக்கம்:10 | நகரப்பதிப்பு | Free

## “இலங்கை நடுநிலை”



உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நெருக்கடி தொடர்பில் இலங்கை தொடர்ந்தும் நடுநிலையான கொள்கையை கடைப்பிடிக்கும் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜனாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (25) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## ரஷ்யாவின் தாக்குதல்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம்



ரஷ்ய கூட்டமைப்பின் ஆயுதப் படைகளால், உக்ரைன் மீதான தூண்டுதலின்றிய ஆக்கிரமிப்பை ஐரோப்பிய ஒன்றியம் கடுமையாகக் கண்டித்து கண்டன அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழு பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து மற்றும்

தொடர்ச்சி P2

## இலங்கை கவலை


உக்ரேனில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் வன்முறைகள் குறித்து இலங்கை அரசாங்கம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது என வெளிநாட்டு அலுவலகள் அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்காக, அதிகபட்சமான கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்குமாறும், பகைமையை உடனடியாக நிறுத்துவதற்காகப் பணியாற்றுமாறும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும்

தொடர்ச்சி P2

# உக்ரேனில் உக்கிரம்





- அணு உலையில் கதிர்வீச்சு அதிகரிப்பு
- நிபந்தனையுடன் பேச்சுக்கு தயார்: ரஷ்யா
- 25 பொதுமக்கள் பலி: 102 பேர் காயம்
- பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அபராதம்

உக்ரேன் மீது ரஷ்யா படையெடுத்ததை அடுத்து, உக்ரேனில் உக்கிரமான மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இந்த மோதல்கள் மற்றும் ஷெல், வான்வழி தாக்குதல்கள் ஊடாக, 127 அப்பாவி பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில், 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 102 பேர் காயமடைந்துள்ளனர் என ஐ.நா மனித உரிமை அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## நியமனச்சான்று கையளிப்பு

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி, தனது நியமனச்சான்றுகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடம், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் வைத்து நேற்று (25) கையளித்தார்.

## போரை உடனே நிறுத்துங்கள்

### புட்டினிடம் இந்தியப் பிரதமர் மோடி வலியுறுத்தல்



உக்ரேன் விவகாரத்தில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டுமென ரஷ்ய ஜனாதிபதி விளாதிமிர் புட்டினிடம் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, தொலைபேசியில் வலியுறுத்தியுள்ளார்.

இந்த போரை நிறுத்த ரஷ்ய ஜனாதிபதியை, இந்திய பிரதமர் மோடி தொடர்பு கொண்டு பேச வேண்டுமென இந்தியாவுக்கான உக்ரைன் தூதர் இகோர் பொலிகா, நேற்றுமுன்தினம் (24) தெரிவித்திருந்தார்.

தொடர்ச்சி P2







## உக்ரேனிய சுற்றுலாப் பயணிகள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

இலங்கைக்கு சுற்றுலா வந்திருக்கும் உக்ரேனிய சுற்றுலாப் பயணிகள், உக்ரேன் மீது ரஷ்யா முன்னெடுத்துவரும் தாக்குதல்களை நிறுத்தக்கோரி, ஆர்ப்பாட்டமொன்றை நேற்று (25) முன்னெடுத்திருந்தனர்.

தொடர்ச்சி P2

## பசிலின் இந்திய விஜயம் ஒத்திவைப்பு



நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் இந்திய விஜயம் பிற்போடப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது இந்தியாவுடன் ஒரு பில்லியன் டொலர் கடனுக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படவிருந்தது. அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மருந்து இறக்குமதிக்காக இந்தக் கடன் பெறப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவர், இந்தியாவுக்கு நேற்று (25) விஜயம் செய்யவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## டோர்ச் லைட் விவகாரம் ஐ.ஜி.பியிடம் முறைப்பாடு

சபைக்குள் டோர்ச் லைட் கொண்டுவரப்பட்ட விவகாரம் தொடர்பில், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னான்டோவுக்கு எதிராக பொலிஸ் மா அதிபரிடம் (ஐ.ஜி.பி) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று (25) கூடியபோது, சபாநாயகர் அறிவிப்பிலேயே மேற்கண்ட விடயம் தொடர்பில் அறிவிப்பொன்றை விடுத்தார்.

பொலிஸாரின் ஆட்சேபனைகளையும் மீறி, மற்றுமொரு பொதியில் எடுத்துவைத்தே டோர்ச் லைட்

தொடர்ச்சி P2

## மின் கட்டணத்தை அதிகரிக்க யோசனை

மின் கட்டணத்தை அதிகரிக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கையொன்றை முன்வைப்பதற்கான செயற்பாடுகளை இலங்கை மின்சார சபையின் அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர்.

மின் கட்டணம் இதற்கு முன்னர் 2014ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிகரிக்கப்படவில்லை.

அந்த வருடத்தில், 25 சதவீதம் மின்கட்டணம் குறைக்கப்பட்டது என்று தெரிவித்துள்ள இலங்கை மின்சார சபையின் முக்கிய அதிகாரி, மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு யோசனையொன்றை முன்வைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.



## திரவப் பால் கொள்வனவு முரண்பாடுகளை தீர்க்கவும்

### விவசாய அமைச்சருக்கு ஜனாதிபதி பணிப்பு

திரவப் பால் கொள்வனவுகளில் காணப்படும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் கால்நடை,

தொடர்ச்சி P2

## ‘ரஞ்சனுக்காக சர்வதேசம் செல்வோம்’


### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறிவிப்பு

தற்போதைய சூழ்நிலையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலைக்காக சர்வதேச சமூகத்தின் உதவியை நாடவேண்டியுள்ளதாகவும், இதற்கு ஹரின் பெர்னாண்டோ எம்.பி தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின்உறுப்பினர்கள் குழு தலையீடு செய்யுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவை நேற்று (25) காலை சென்று பார்வையிட்டதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“மக்கள் சார் மனிதாபிமானியான ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலைக்காக ஜனநாயகப் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டே இருக்கின்றோம். அவர் தற்போது சிறைப்படுத்தப்பட்டிருப்பது

தொடர்ச்சி P2



## நெதர்லாந்து பெண்ணின் சடலம் வெள்ளவத்தையில் மீட்பு

வெள்ளவத்தை தொடர்மாடி குடியிருப்பில் மர்மமான முறையில் உயிரிழந்த நெதர்லாந்து நாட்டு பெண்ணொருவரின் சடலம் நேற்று முன்தினம் (24) இரவு மீட்கப்பட்டது என வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த 67 வயதுடைய Kalidien Nisha Gatoen என்ற பெண்ணே இவ்வாறு மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். Tik Tok சமூக வலைத்தளத்தின் ஊடாக 37 வயதுடைய சிங்கள இளைஞரொருவருடன் காதல் தொடர்பு பேணிவந்துள்ள குறித்த பெண், அவரை தேடி இலங்கைக்கு வந்துள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இலங்கை வந்து, அவ்விளைஞனின் வீட்டில் தங்கியும்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ரஷ்யாவின் தாக்குதல்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம்

ருமேனியா தூதரகங்களுடன் உடன்படிக்கையின் அடிப்படையிலேயே அந்த கண்டன அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழுவின், அரசியல், வர்த்தகம் மற்றும் தகவல் தொடர்பு பிரிவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள அந்த அறிக்கையில்,

உக்ரைன் மீதான ரஷ்யாவின் சமீபத்திய நடவடிக்கைகள் ஐ.நா சாசனம் மற்றும் மின்ஸ்க் ஒப்பந்தங்களை அப்பட்டமாக மீறுவதாகுமென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா சாசனத்தின் பிரகாரம் எந்தவொரு மாநிலத்தின் பிராந்திய ஒருமைப்பாடு அல்லது அரசியல் சுதந்திரத்திற்கு எதிரான அச்சுறுத்தல் அல்லது சக்தியைப் பயன்படுத்துவதைத் தடைசெய்கிறது அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்களுக்கு முரணான வேறெந்த வகையிலும். இந்த இராணுவ நடவடிக்கை மோதலை அமைதியான முறையில் தீர்க்கும் இராஜதந்திர முயற்சிகளுக்கு கடுமையான அடியாகுமென அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய மோதல்களுக்கு அரசியல் தீர்வு காண பல வருடங்களாக முயற்சித்து வருகிறோம். நேட்டோ-ரஷ்யா கவுன்சிலின் மன்றத்தில் உரையாடலுக்கான அழைப்புகளை ரஷ்யா ஏற்காததற்கு தாங்கள் வருந்துகிறோமென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனின் இறையாண்மையை ரஷ்யா புறக்கணிப்பது மட்டுமல்லாமல், அதன் இருப்புக்கான உரிமையை வெளிப்படையாக கேள்விக்குள்ளாக்குகிறது.

இந்தோ-பசிபிக் பிராந்தியம் உட்பட உலகெங்கிலும் நாங்கள் ஒன்றுபட்டு நிற்பதாக உறுதியளித்துள்ள விதிகள் அடிப்படையிலான சர்வதேச ஒழுங்கிற்கு இது ஒரு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.

உலகளவில் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கும் இந்த ஆக்கிரமிப்பை உடனடியாக முடிவுக்கு கொண்டுவருமாறு ரஷ்யாவிடம் கோரிக்கை வைக்குமாறு சர்வதேச சமூகத்தை ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுக்கொள்கிறது.

இந்த பிரகடனப்படுத்தப்பட்ட சுதந்திரத்தை அங்கிகரிக்கும் ரஷ்யாவின் சட்ட விரோதமான முடிவைப் பின்பற்ற வேண்டாம் என்றும், மற்ற நாடுகளை அவ்வாறு செய்வதிலிருந்து ஊக்கப்படுத்த வேண்டாம் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு அழைப்பு விடுக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில், உக்ரைனின் எல்லைகளை மீறாத தன்மைக்காகவும், வெளிப்புற வற்புறுத்தலின்றி அதன் சொந்த முடிவுகளை எடுக்கும் உரிமைக்காகவும் நாம் நிற்க வேண்டும்.


சர்வதேச அளவில் அங்கிகரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் உக்ரேனின் சுதந்திரம், இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கான அதன் அசைக்க முடியாத ஆதரவையும் அர்ப்பணிப்பையும் ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் வலியுறுத்துகிறது என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கை...

இலங்கை கேட்டுக்கொள்கின்றது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராஜதந்திரம் மற்றும் நேர்மையான உரையாடலின் மூலம் நெருக்கடியைத் தீர்த்துக் கொள்வதற்காக சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து முயற்சிப்பது அவசியமென இலங்கை வலியுறுத்துகின்றது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உக்ரேனில் உக்கிரம்





மொஸ்கோவின் தகவல்களின் பிரகாரம் உக்ரைனின் கட்டுப்பாட்டிலிருந்த செர்னோபில் பகுதியை ரஷ்யா கைப்பற்றிய மறுநாளே செர்னோபில் அணு உலையிலிருந்து வரும் கதிர்வீச்சு அதிகரித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அணு உலையை ரஷ்யா கைப்பற்றிய நிலையில் உக்ரைன் அணுசக்தி நிறுவனம் இந்த குற்றச்சாட்டை வைத்துள்ளது. சோவியத் யூனியன் காலத்தில் வெடித்து சிதறிய செர்னோபில் அணு உலையை நேற்று முன்தினம் (24) ரஷ்யா மீண்டும் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது.

செர்னோபில் அணு உலை 1986ல் ஏப்ரல் மாதம் வெடித்து சிதறியது. அந்த அணு உலையில் செய்யப்பட்ட சோதனை ஒன்றின் போது திடீரென செர்னோபில் அணு உலையின் மின்சார உற்பத்தி நின்று போய், பின்னர் அணு உலை வெடிப்பிற்கு அது காரணமாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மோதல்கள் நேற்றும் விஸ்வரூபம் எடுத்திருந்தன. உக்ரைனை கடல், வானம், தரை என்று மூன்று பக்கத்திலும் இருந்தும் தாக்கி வருகிறது. ரஷ்யாவின் படைகள் செர்னோபில் பகுதியை கைப்பற்றியது. அங்கு பெரிய அளவில் இராணுவ வீரர்கள் இல்லாத நிலையில் ரஷ்ய இராணுவம் தாங்கிகளோடு புகுந்து தாக்குதல்களை நடத்தியது.

எது நடக்க கூடாது என்று நினைத்தோமோ அது நடந்துவிட்டது, இங்கு கதிர்வீச்சு ஏற்பட்டால் அது பல கோடி மக்களை பாதிக்கும் என்று உலக சுற்றுசூழல் ஆர்வலர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில், இராணுவத்தாக்குதலை நிறுத்தினால் பேசத்தயார் என்று ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லால்ரோவ் கூறியுள்ளார். “அடக்குமுறையில் இருந்து உக்ரைன் மீட்கப்பட வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்” என்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீது வியாழக்கிழமையன்று காலையில் ரஷ்யா இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியது. அந்நாட்டு வான்வழிக் கட்டமைப்பு முழுமையாகக் கைப்பற்றிவிட்டதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மனைவி மற்றும் மகளை பத்திரமான இடத்துக்கு அனுப்புவதற்கான பஸ்ஸில் ஏற்றி வழியனுப்பி வைத்த தந்தையின் உணர்ச்சிகரமான நிமிடங்களை வீடியோவாக சிலர் பதிவு செய்து இணையத்தில் வெளியிட்டுள்ளார்கள். “போர் சூழல் எப்படி வேண்டுமானாலும் இருக்கும். எப்போது தாக்குதல் நடக்கும், எங்கு குண்டு போடுவார்கள் என்று எதுவும் தெரியாத சூழலில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருக்க வேண்டும்” என்றும் அந்த குரல் பதிவில் உள்ளது.

இதனிடையே, ரஷ்யாவில் போர் மேகங்கள் சூழ்ந்த நிலையில், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், ரஷ்யாவுக்கு இரண்டு நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். விமான நிலையத்தில் தன்னை வரவேற்க வந்த ரஷ்ய அதிகாரி ஒருவரிடம் இம்ரான் கான் “என்ன ஒரு நேரத்தில் நான் வந்துள்ளேன். மிகவும் கிளர்ச்சியூட்டுகிறது" என்று கூறினார். இந்த உரையாடலின் வீடியோ தற்போது இணையத்தில் பரவி வருகிறது. இதனால் இம்ரான் கானுக்கு பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இந்நிலையில் நியூயோர்க்கில் இருக்கும் ‘நேஷனல் பேங்க் ஆப் பாகிஸ்தான்' (பாகிஸ்தான் தேசிய வங்கி) கிளைக்கு அமெரிக்க நிறுவனங்கள் 55 மில்லியன் அமெரிக்க டொலரை அபராதமாக விதித்துள்ளன.

உக்ரேனில் இருந்து இடம்பெயர்வோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பெரும் நகரங்களிலிருந்து மக்கள், பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றனர். மின்சாரமும் தொலைத்தொடர்பும் பல இடங்களில் துண்டிக்கப்பட்டுள்ளன. அதனால், “இனி பாதுகாப்பான இடம் என ஒன்று இல்லை" - பிபிசி யுக்ரேனிய சேவை ஆசிரியர் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ‘ரஞ்சனுக்காக சர்வதேசம் செல்வோம்’

நமக்கும் நாட்டுக்கும் இழப்பாகவே பார்க்கிறேன். தற்போதைய நிலையில் ரஞ்சன் ராமநாயக்க விடுதலை செய்யப்பட்டிருந்தால், இந்நாட்டில் துன்பப்படும் மக்களுக்கு உதவுவதில் அவர் முக்கியப் பங்காற்றியிருப்பார் என்றார்.

ரஞ்சன் ராமநாயக்கவிற்கு பூரண சுதந்திரம் வழங்குமாறு ஜனாதிபதியிடம் நான் பலமுறை கோரிக்கைவிடுத்துள்ளேன். நேற்றும் இன்றும் அந்த கோரிக்கையை முன்வைத்தோம். ஆனால் அவருக்கு இன்னும் அந்த விடுதலை வழங்கப்படவில்லை.

நாங்கள் உண்மையான தேசபற்றாளர்கள். நாட்டை உண்மையாக நேசிக்கும் இந்த தாய்நாட்டின் பொது சேவையாளர்கள் நாங்கள். எனவே, ரஞ்சன் ராமநாயக்கவின் பூரண விடுதலையை வெல்வதே எமது ஒரே நோக்கமாகும். அதற்காக, சட்டரீதியாகவும், ஜனநாயக ரீதியாகவும், உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் எம்மால் இயன்ற மிக உயர்ந்த பங்களிப்பை செய்ய உறுதி பூண்டுள்ளோம் என்றார்.

# நெதர்லாந்து பெண்ணின் சடலம் வெள்ளவத்தையில் மீட்பு

இருந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழப்புக்கான காரணம் இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதுடன், சடலம் களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது

# டோர்ச் லைட் விவகாரம்
## ஐ.ஜி.பியிடம் முறைப்பாடு

எடுத்துவரப்பட்டுள்ளது என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் சபாநாயகர், சபைக்கு அறிவித்தார்.

ஹரின் பெர்னாண்டோ எம்.பி கொண்டு வந்த ‘சாதனங்கள்’ குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென, சபையின் கவனத்துக்கு அமைச்சர் தினேஷ் குணவர்தன நேற்று முன்தினம் (24) கொண்டுவந்தார். அந்த சாதனங்களின் கூறுகள் மற்ற பொருட்களுடன் கலந்தால், இரசாயன எதிர்வினையைத் தூண்டுவதற்கு பயன்படுத்தப்படலாம் என்றும் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# போரை உடனே நிறுத்துங்கள்

அதாவது, “பிரதமர் மோடி சொன்னால் ரஷ்ய ஜனாதிபதி கேட்பார். எத்தனை உலகத் தலைவர்கள் சொல்வதை புட்டின் கேட்கக்கூடும் என்று எனக்கு தெரியவில்லை. ஆனால், மோடி மீது எனக்கு நிறைய நம்பிக்கை உள்ளது. அவரது குரல் மதிப்பு மிக்கது" என்று தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தியில் உள்ளதாவது: “நேட்டோ - ரஷியா இடையிலான பிரச்சினைக்கு அமைதியான மற்றும் நேர்மையான முறையில் தீர்வு காண வேண்டும் என்பதே இந்தியாவின் நீண்டகால நிலைப்பாடாக உள்ளது என்பதை பிரதமர் சுட்டிக்காட்டினார். இந்தியா ரஷ்யா உயர் அதிகாரிகள் மட்டத்தில் போர் குறித்து தொடர்ந்து பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் என்று பிரதமர் கேட்டுக் கொண்டார்.

# திரவப் பால் கொள்வனவு முரண்பாடுகளை தீர்க்கவும்

பண்ணை ஊக்குவிப்பு, பால் மற்றும் முட்டை கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் ஆகியோருக்குப் பணிப்புரை விடுத்தார்.

நாரஹேன்பிட்டியில் உள்ள மில்கோ தொழிற்சாலைக்கு நேற்று (25) கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். அதன் போதே மேற்கண்டவாறு பணித்துள்ளார்


பால் பண்ணையாளர்களை மேம்படுத்துதல் மற்றும் திரவப் பால் பாவனையை ஊக்குவிக்கும் நோக்கில் ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உக்ரேனிய சுற்றுலாப் பயணிகள்...

கொழும்பிலுள்ள ரஷ்ய தூதுவராலயத்துக்கு முன்பாகவே இவ்வாறு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

“யுத்தம் வேண்டாம்”. “உக்ரேன் மீதான ஆக்கிரமிப்பை நிறுத்து”, “புட்டினே யுத்தம் வேண்டாம்” உள்ளிட்ட வாசகங்கள் எழுத்திய பதாகைளையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் ஏந்திநின்றனர்.

# புட்டின் விரும்புவது என்ன?



ரஷ்ய ஜனாதிபதி விளாதிமிர் புட்டின் உக்ரேனைத் தாக்கும் திட்டத்தை பல மாதங்களாக மறுத்து வந்தார். ஆனால் பெப்ரவரி 23ஆம் திகதி அவர் ரஷ்யாவின் "சிறப்பு ராணுவ நடவடிக்கை" பற்றிய அறிவிப்பை வெளியிட்டார்.

தொலைக்காட்சியில் தோன்றி நேரடியாகவே இந்த அறிவிப்பை அவர் வெளியிட்ட பிறகு யுக்ரேன் தலைநகர் கீஃப் மற்றும் நாட்டின் பிற பகுதிகளிலும் துப்பாக்கிச்சூடு, ஷெல் குண்டு தாக்குதல்கள் பற்றிய தகவல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

'அமைதியை பேணுவதற்காக' என்று கூறி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள இரண்டு கிழக்கு பிராந்தியங்களுக்குள் துருப்புக்கள் செல்ல உத்தரவிட்ட சில நாட்களுக்குப் பிறகு,புட்டின் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

சமீபத்திய மாதங்களில் ரஷ்யா குறைந்தபட்சம் 2,00,000 துருப்புக்களை உக்ரேனின் எல்லைகளுக்கு அருகில் நிறுத்தியுள்ளது.

அடுத்து ஏற்படும் நிகழ்வுகள் ஐரோப்பாவின் முழு பாதுகாப்பு கட்டமைப்பையும் பாதிக்கலாம்.

## ரஷ்ய துருப்புகள் எங்கு அனுப்பப்படுகின்றன?

2014இல் ரஷ்யா, உக்ரேனை ஆக்கிரமித்தபோது, புட்டினின் ஆதரவுடன் கிளர்ச்சியாளர்கள் கிழக்கே உள்ள பெரிய பகுதிகளைக் கைப்பற்றினர் . கூடவே அவர்கள் உக்ரேனின் இராணுவத்துடன் போரிட்டு வருகின்றனர்.

சர்வதேச மின்ஸ்க் சமாதான உடன்படிக்கை இருந்தபோதிலும் மோதல் தொடர்கிறது. எனவே கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள இரண்டு பகுதிகளுக்கு துருப்புக்களை அனுப்புவதாக ரஷ்ய ஜனாதிபதி கூறுகிறார்.

ரஷ்ய படையினரை 'அமைதி காப்புப் படையினர்' என்ற வார்த்தையை ஜனாதிபதி புட்டின் பயன்படுத்தி அழைத்ததை ஐநா பொதுச்செயலர் திட்டவட்டமாக நிராகரித்தார்.

ரஷ்யா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய இரு தரப்புக்கும் இடையே இருக்கும், 4 கோடியே 40 இலட்சம் மக்கள் வசிக்கும் உக்ரேன் மீது உடனடியான புதிய படையெடுப்பை ரஷ்யா நடத்தியிருப்பதாக மேற்கு நாடுகள் நம்புகின்றன.

அதன் முன்னோட்டமாகவே கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள டொனெட்ஸ்கில் ரஷ்ய பீரங்கிகள் வந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்கில் போர் நிறுத்தப்படாவிட்டால், மேலும் ரத்தக்களறிக்கு உக்ரேன் பொறுப்பேற்க நேரிடுமென ஜனாதிபதி புட்டின் எச்சரித்தார்.

ஆனால் ஏற்கெனவே தொடர்ச்சியான மோசடி தாக்குதல் சம்பவங்கள் நடந்துள்ளன. அவற்றில் ஏதேனும் ஒன்று ரஷ்ய தாக்குதலுக்கு சாக்குப்போக்காக பயன்படுத்தப்படலாம்.

## உக்ரேனில் புட்டினுக்கு என்ன பிரச்னை?

நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய ஐரோப்பிய அமைப்புகளை நோக்கிய உக்ரேனின் நகர்வை ரஷ்யா நீண்ட காலமாக எதிர்த்து வருகிறது. மேற்கத்திய நாடுகளின் கைப்பாவை உக்ரேன் என்றும், அது ஒருபோதும் முழுமையான நாடாக இருக்கவில்லை என்றும் புட்டின் கூறியுள்ளார்.

30 நாடுகளின் தற்காப்புக் கூட்டணியான நேட்டோவுடன் அது இணையாது என்றும், உக்ரேன் இராணுவ விலக்கலை மேற்கொண்டு, நடுநிலை நாடாக மாற வேண்டும் என்றும் மேற்கத்திய நாடுகள் மற்றும் உக்ரேனிடம் இருந்து புட்டின் உத்தரவாதம் கோரியுள்ளார்.

முன்னாள் சோவியத் குடியரசான உக்ரேன், ரஷ்யாவுடன் ஆழமான சமூக மற்றும் கலாசார உறவுகளைக் கொண்டுள்ளது, மேலும் ரஷ்ய மொழி அங்கு பரவலாக பேசப்படுகிறது. ஆனால் 2014 இல் ரஷ்யா படையெடுத்ததிலிருந்து அந்த உறவுகள் சிதைந்துள்ளன.

2014ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அதன் ரஷ்ய சார்பு அதிபர் பதவி நீக்கம் செய்யப்பட்டபோது உக்ரேனை ரஷ்யா தாக்கியது. அப்போதிலிருந்து கிழக்கில் நடந்த போர் 14,000 க்கும் அதிகமான உயிர்களை பலி கொண்டுள்ளது.

## ஏன் ஆபத்தானது?

இதுவரை மக்கள் குடியரசுகள் என்று அழைக்கப்படும் டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் ஆகியவை ரஷ்ய ஆதரவாளர்களால் நடத்தப்படுகின்றன.

அந்த பகுதிகளை சுதந்திரமாக அங்கீகரித்த புட்டினின் ஆணையின் கீழ், ரஷ்ய துருப்புக்கள் அங்கு நிலைநிறுத்தப்பட்டதாக முதன்முறையாக அங்கிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்களால் இராணுவ தளங்களையும் உருவாக்க முடியும்.

ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான போர் நிறுத்த மீறல்களைக் காணும் ஒரு பகுதியில் ரஷ்ய துருப்புக்களைக் குவிப்பதன் மூலம், வெளிப்படையான போரின் ஆபத்து மிக அதிகமாகிறது.

மின்ஸ்க் சமாதான உடன்படிக்கையின் கீழ் இரண்டு கிளர்ச்சிப் பகுதிகளும் உக்ரேனுக்குள் சிறப்பு அந்தஸ்தைப் பெற்றிருக்கும். ஆனால் புட்டினின் நடவடிக்கை அதை நடக்கவிடாமல் தடுக்கிறது.

இரண்டு கிளர்ச்சி அரசுகளும் தாங்கள் வைத்திருக்கும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பு மீது மட்டும் உரிமை கொண்டாடாமல், யுக்ரேனின் டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பகுதிகளையும் விரும்புவதுதான் நிலைமையை மிகவும் ஆபத்தானதாக ஆக்குகிறது.

"நாங்கள் அவர்களை அங்கிகரித்துள்ளோம். எனவே இதன் பொருள் அவர்களின் எல்லா நிறுவக ஆவணங்களையும் நாங்கள் அங்கிகரித்துள்ளோம் என்பதுதான்," என்று ரஷ்ய ஜனாதிபதி கூறினார்.

கிழக்கில் உக்ரேன் "இனப்படுகொலை" செய்ததாக பொய்யான குற்றச்சாட்டுகளுடன் ரஷ்யா ஏற்கெனவே போருக்கான களத்தை தயார் செய்துள்ளது.

கிளர்ச்சியாளர்களால் நிர்வகிக்கப்படும் பகுதிகளில் 7,00,000க்கும் அதிகமான கடவுச்சீட்டுகளை அது வழங்கியுள்ளது. எனவே எந்தவொரு செயலும் அதன் சொந்த குடிமக்களைப் பாதுகாப்பதாக நியாயப்படுத்தப்படலாம்.

## ரஷ்யாவால் எந்த கட்டம் வரை செல்ல முடியும்?

ரஷ்ய ஜனாதிபதி புட்டின், கிழக்கில் சமாதான உடன்படிக்கைகளை மீறுவதுடன் நிறுத்திக்கொள்ளக்கூடும். தான் விரும்பியதைப் பெறவில்லை என்றால் "இராணுவ-தொழில்நுட்ப" நடவடிக்கைகள் பற்றி மட்டுமே அவர் கடந்த காலத்தில் பேசியுள்ளார். "ரஷ்ய படையெடுப்பு இல்லை" என்று ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

ஆனால் ராஜீய தீர்வுக்கான வாய்ப்புகள் சிறப்பாக இல்லை. அவர் மேலும் நடவடிக்கைகளை எடுக்கக்கூடும் என்று மேற்கத்திய நாடுகள் அஞ்சுகின்றன.

"28 லட்சம் அப்பாவி மக்கள் வசிக்கும் யுக்ரேனின் தலைநகரான கீவ்வை ரஷ்யா குறிவைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்,"என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் எச்சரித்துள்ளார்:

உக்ரேன் சமீபத்திய ஆண்டுகளில் தனது ஆயுதப்படைகளை வலுப்படுத்தியுள்ளது. கூடவே ரஷ்யா விரோத போக்குள்ள மக்களை எதிர்கொள்ளும்.

திரட்டி வைக்கப்பட்டுள்ள 18-60 வயதுடைய அனைவரையும் இராணுவம் அழைத்துள்ளது.

அமெரிக்க உயர்மட்ட அராணுவ அதிகாரி மார்க் மில்லி, " ரஷ்ய படைகளின் அளவை பார்க்கும்போது , அடர்த்தியான நகர்ப்புறங்களில் மோதலுடன் கூடிய "கொடூரமான" சூழ்நிலையை அது குறிக்கிறது," என்றார்.

ரஷ்ய ஜனாதிபதிக்கு வேறு மாற்று வழிகளும் உள்ளன. விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்ட பகுதி அல்லது உக்ரேனிய துறைமுகங்களை முற்றுகையிடுவது அல்லது அணு ஆயுதங்களை அண்டை நாடான பெலாரூஸ் நோக்கி நகர்த்தலாம்.

சைபர் தாக்குதல்களையும் நடத்தலாம். உக்ரேனிய அரசு வலைதளங்கள் ஜனவரியில் செயலிழந்தன. பெப்ரவரி நடுப்பகுதியில் உக்ரேனின் இரண்டு பெரிய வங்கிகளின் சேவை பாதிக்கப்பட்டன.

## மேற்கத்திய நாடுகள் என்ன செய்ய முடியும்?

ரஷ்யாவின் இந்த நடவடிக்கை சட்டவிரோதமானது என்று மேற்குலகம் கூறுகிறது. மேலும் இது உக்ரேனின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்கு எதிரானது என ஐ.நா பொதுச்செயலர் அன்டோனியோ கூட்டரெஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆனால், உக்ரேனுக்கு போர் படைகளை அனுப்பும் திட்டம் எதுவும் இல்லை என்று நேட்டோ நட்பு நாடுகள் தெளிவுபடுத்தியுள்ளன. அதற்கு பதிலாக அவர்கள் யுக்ரேனுக்கு ஆலோசகர்கள், ஆயுதங்கள் மற்றும் கள மருத்துவமனைகளை வழங்கியுள்ளனர்.

எனவே ரஷ்யாவிற்கு பொருளாதாரத் தடைகளை விதிப்பதே முக்கிய பதிலடியாக இருக்கும்.

ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நிறுவனங்களின் முக்கிய முதலீடான ரஷ்யாவின் நிறைவு செய்யப்பட்ட Nord Stream 2 எரிவாயுக் குழாய்க்கான அனுமதியை ஜெர்மனி நிறுத்தியுள்ளது.

கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை சுதந்திர நாடுகளாக பாராளுமன்றத்தில் அங்கிகரித்த ரஷ்யாவின் "சட்டவிரோத முடிவை" எதிர்த்து பரந்த பொருளாதாரத் தடைகளை விதிக்க ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புக் கொண்டுள்ளது.

மேற்கத்திய நிதி நிறுவனங்களில் இருந்து ரஷ்யாவின் அரசை துண்டித்து, உயர்மட்டத்தில் இருப்பவர்களை குறிவைப்பதாக அமெரிக்கா கூறுகிறது.

ஐந்து பெரிய ரஷ்ய வங்கிகள் மற்றும் மூன்று பில்லியனர்களை பிரிட்டன் குறிவைக்கிறது.

பெரிய அளவிலான தடைகள் விதிப்பது குறித்தும் வல்லரசுகள் பரிசீலித்து வருகின்றன.

ரஷ்யாவின் நிதி நிறுவனங்கள் மற்றும் முக்கிய தொழில்களை அமெரிக்கா பார்க்கிறது. ஐரோப்பிய ஒன்றியம், நிதிச் சந்தைகளுக்கான ரஷ்ய அணுகலில் கவனம் செலுத்துகிறது .

"ரஷ்யாவும் அதன் ஆதரவாளர்களும் எங்கும் மறைந்துகொள்ள முடியாது. ரஷ்ய வணிகம், டொலர் மற்றும் பவுண்டை அணுகுவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்," என்று பிரிட்டன் எச்சரித்துள்ளது.

சர்வதேச ஸ்விஃப்ட் கட்டண முறையிலிருந்து ரஷ்யாவின் வங்கி முறையைத் துண்டிப்பதே இறுதிப் பொருளாதார வெற்றியாக இருக்கும். ஆனால் அது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய பொருளாதாரங்களை மோசமாக பாதிக்கும். இதற்கிடையில், பால்டிக் நாடுகள் மற்றும் போலந்தில் 5,000 நேட்டோ படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும் 4,000 பேர் ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, ஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்படலாம்.

## புட்டினுக்கு என்ன வேண்டும்?

நேட்டோவுடனான தனது உறவை யுக்ரேன் மறுபரிசீலனை செய்ய வலியுறுத்தும் ரஷ்யா, மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளது.

முதலில், நேட்டோ மேலும் விரிவடையாது என்ற சட்டபூர்வ உறுதிமொழியை தர ஜனாதிபதி புட்டின் விரும்புகிறார். "உக்ரேன் ஒருபோதும் நேட்டோவில் உறுப்பினராகாமல் இருப்பதை உறுதி செய்வது எங்களுக்கு முற்றிலும் கட்டாயமாகும்" என்று ஏற்கெனவே ரஷ்ய துணை வெளியுறவு அமைச்சர் செர்கே ரியாப்கோஃப் கூறினார்.

"இந்த விஷயத்தில் ரஷ்யாவுக்கு பின்வாங்க வேறு வாய்ப்பே இல்லை - அவர்கள் முன்னேறி வரும்வரை நாங்கள் வெறுமனே இருப்போம் என்று நினைக்கிறார்களா?" என்று புட்டின் கடுமையாகவே கூறினார்.

உக்ரேனின் சுதந்திரம் மற்றும் இறையாண்மையை மதிக்கும் ஒப்பந்தத்தில் 1994இல் ரஷ்யா கையெழுத்திட்டது.

ஆனால் கடந்த ஆண்டு ஜனாதிபதி புட்டின் ரஷ்யர்களையும் உக்ரேனியர்களையும் "ஒரே நாட்டு மக்கள்" என்று விவரித்திருந்தார்.

நவீன உக்ரேன், கம்யூனிச ரஷ்யாவால் உருவாக்கப்பட்டது என்று இப்போது புட்டின் கூறுகிறார். 1991ஆம் ஆண்டு டிசெம்பரில் சோவியத் ஒன்றியத்தின் சரிவை "வரலாற்றுபூர்வ ரஷ்யாவின் சிதைவு" என்றவாறு அவர் பார்க்கிறார்.

உக்ரேன் நேட்டோவுடன் இணைந்தால், அந்த கூட்டணி கிரைமியாவை மீண்டும் கைப்பற்ற முயற்சி செய்யலாம் என்றும் ஜனாதிபதி புட்டின் வாதிட்டார்.

நேட்டோ "ரஷ்யாவின் எல்லைகளுக்கு அருகே தாக்கும் ஆயுதங்களை" நிலைநிறுத்தக்கூடாது என்பதும், 1997 முதல் கூட்டணியில் இணைந்த உறுப்பு நாடுகளிலிருந்து படைகள் மற்றும் இராணுவ உள்கட்டமைப்பை அகற்றவேண்டும் என்பதும் அவரது மற்ற முக்கிய கோரிக்கைகளாகும்.

அதாவது மத்திய ஐரோப்பா, கிழக்கு ஐரோப்பா மற்றும் பால்டிக்ஸ் ஆகியவை இதில் அடங்கும். உண்மையில் நேட்டோ அதன் 1997க்கு முந்தைய எல்லைகளுக்குத் திரும்ப வேண்டும் என்று ரஷ்யா விரும்புகிறது.

## நேட்டோ என்ன சொல்கிறது?

நேட்டோ புதிய உறுப்பினர்களுக்கான திறந்த-கதவு கொள்கையுடனான தற்காப்பு கூட்டணியாகும். மேலும் தனது 30 உறுப்பு நாடுகளில் மாற்றம் இருக்காது என்பதில் அது உறுதியாக உள்ளது.

"தெளிவான, சாத்தியமான காலவரையறைகளுக்கு உட்பட்ட முறையில்" நேட்டோவில் இணையும் கோரிக்கையை உக்ரேன் ஜனாதிபதி விடுத்துள்ளார். ஆனால், நீண்ட காலத்திற்கு அது நடக்க வாய்ப்பில்லை என்பதை ஜெர்மனியின் ஆட்சித்துறைத் தலைவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

எந்தவொரு தற்போதைய நேட்டோ நாடும் தனது உறுப்பினர் பதவியை விட்டுக்கொடுக்கும் என்ற பேச்சுக்கே இடமில்லை.

நேட்டோ "கிழக்கே ஓர் அங்குலம் கூட விரிவடையாது" என்று 1990ல் மேற்குலகம் உறுதியளித்தது. ஆனால் அது பின்பற்றப்படவில்லை என்று ரஷ்ய ஜனாதிபதி கூறுகிறார்.

இது சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு முந்தைய நிலைமை. இருப்பினும், அப்போதைய சோவியத் ஜனாதிபதி மிகைல் கோர்பச்சேஃப்புக்கு அளித்த வாக்குறுதியானது மீண்டும் ஒன்றிணைக்கப்பட்ட ஜெர்மனியின் பின்னணியில் கிழக்கு ஜெர்மனியை மட்டுமே குறிக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது.

கோர்பச்சேவ் பின்னர் "நேட்டோ விரிவாக்க தலைப்பை விவாதிக்கவில்லை" என்று அவர் கூறினார்.

ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சருடன் திட்டமிடப்பட்ட பேச்சுவார்த்தைகளை பிரான்சும் அமெரிக்காவும் ரத்து செய்துவிட்டதால், இப்போதைக்கு வழி இருப்பதுபோலத் தெரியவில்லை. ஆனால் பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய இரு நாடுகளும் பேச்சுவார்த்தைக்கான வாய்ப்பு திறந்திருப்பதாகக் கூறுகின்றன.

எந்தவொரு இறுதி ஒப்பந்தமும் கிழக்கில் போர் மற்றும் ஆயுதக் கட்டுப்பாடு ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

இந்த நிலையில், குறுகிய மற்றும் நடுத்தர தூர ஏவுகணைகளை கட்டுப்படுத்துவது மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் தொடர்பான புதிய ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை தொடங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

ஆனால், அமெரிக்க அணு ஆயுதங்கள் அனைத்தும் தங்கள் நாட்டுப் பகுதிகளுக்கு அப்பால் செல்வதைத் தடுக்க வேண்டும் என்று ரஷ்யா விரும்பியது.

ரஷ்யாவில் இரண்டு, ருமேனியா மற்றும் போலந்தில் இரண்டு ஏவுகணைத் தளங்களில் பரஸ்பர சோதனைகளை மேற்கொள்ள முன்மொழியப்பட்ட யோசனைகளில் "வெளிப்படையான திட்டம்" இருக்க வேண்டும் என்பதற்கு சாதகமாக ரஷ்யா இருந்தது.

(நன்றி. பி.பி.சி தமிழ்)

> ரஷ்யாவிற்கு பொருளாதாரத் தடைகளை விதிப்பதே முக்கிய பதிலடியாக இருக்கும். ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நிறுவனங்களின் முக்கிய முதலீடான ரஷ்யாவின் நிறைவு செய்யப்பட்ட Nord Stream 2 எரிவாயுக் குழாய்க்கான அனுமதியை ஜெர்மனி நிறுத்தியுள்ளது.

> "ரஷ்யாவும் அதன் ஆதரவாளர்களும் எங்கும் மறைந்துகொள்ள முடியாது. ரஷ்ய வணிகம், டொலர் மற்றும் பவுண்டை அணுகுவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்," என்று எச்சரித்துள்ள பிரிட்டன் ஐந்து பெரிய ரஷ்ய வங்கிகள் மற்றும் மூன்று பில்லியனர்களை குறிவைக்கிறது

> நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய ஐரோப்பிய அமைப்புகளை நோக்கிய உக்ரேனின் நகர்வை ரஷ்யா நீண்ட காலமாக எதிர்த்து வருகிறது. மேற்கத்திய நாடுகளின் கைப்பாவை உக்ரேன் என்றும், அது ஒருபோதும் முழுமையான நாடாக இருக்கவில்லை என்றும் புட்டின் கூறியுள்ளார்

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களின் நாடகம்

# ஒன்றில் இரண்டு வராது





ரஸீன் ரஸ்மின்

இலங்கையில் இன்று எதை கொள்வனவு செய்வதாக இருந்தாலும் வரிசையில் நிற்க வேண்டியுள்ளது. இதற்காக என்னவோ, "இலங்கை ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடு" என்று சொல்கிறார்களோ தெரியவில்லை. முன்னர் காஸ், பால்மா என்பவற்றுக்காகப் பொதுமக்கள் வரிசையில் நின்றனர். இன்று எரிபொருக்காக வரிசையில் காத்து நிற்கின்றார்கள்.

மக்கள் பொருளாதார ரீதியில் நலுவுற்றிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், அன்றாட தேவைகளான எரிபொருளும் மின்சாரமும் எந்த நேரத்திலும் இல்லாமல் போகும் என்ற பயத்தால் நாள்களும் நகர்ந்து கொண்டே செல்கின்றன.

உலக அளவில், சவுதி அரேபியாவுக்கு அடுத்து இரண்டாவது பெரிய எண்ணைய் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஒன்றாக ரஷ்யா திகழ்கிறது. இயற்கை எரிவாயு உற்பத்தியிலும் ரஷ்யா உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இந்த நிலையில் ரஷ்யா- உக்ரைன் இடையேயான போர் காரணமாக, இலங்கையில் எரிபொருளுக்கான தட்டுப்பாடு இன்னும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகளே அதிகமுள்ளன.

ரஷ்யா - உக்ரைன் போர் காரணமாக உலக சந்தையில் கச்சா எண்ணெயின் விலை அதிகரித்துள்ளதாகவும், அதனால் இலங்கையில் எரிபொருள் விலை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுகிறது.

எரிபொருளுக்கு இலங்கையை விட இரண்டு, மூன்று மடங்கு அதிகம் தேவையுள்ள இந்தியாவிலேயே, கடந்த ஒருமாத்த்துக்கும் மேலாக விலையில் மாற்றமின்றி, பழைய விலைக்கே இன்றும் எரிபொருள் விற்பனை செய்யப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இலங்கையில் சில வாரங்களாக எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது. "எரிபொருள் கொள்வனவு செய்ய, போதிய டொலர் இல்லை. இதனால் கையிருப்பில் உள்ள எரிபொருளை அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரமே வழங்க முடியும்" என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அண்மையில் தெரிவித்திருந்தது.

அத்துடன், பல மில்லியன் நட்டத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இயங்குவதால், உடனடியாக எரிபொருள் விலைகளை அதிகரிப்பதற்கு நிதி அமைச்சு அனுமதி வழங்க வேண்டும் என எரிசக்தி அமைச்சு, அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருக்கிறது. இதனால், இலங்கையில் எப்போது வேண்டுமானாலும் நள்ளிரவு நேரத்தில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கலாம் என்பது உண்மையாகும்.

எனினும், இந்த விடயம் பற்றி கடந்த அமைச்சரவையில் பேசப்பட்ட போதிலும் எரிபொருள் விலை அதிகரிப்புக்கு அமைச்சரவையில் எந்த முடிவுகளும் எடுக்கப்படவில்லை எனவும் எந்தப் பிரச்சினைகளுமின்றி எரிபொருள் விநியோகத்தை முன்னெடுக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி இதன்போது எரிசக்தி அமைச்சருக்கு ஆலோசனை வழங்கினார் என்றும் சொல்லப்பட்டது.

## டீசலும் இல்லை; பெற்றோலும் இல்லை

எமது நாட்டில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இழுத்து மூடப்பட்டிருந்ததை, கடந்த வாரம் நேரில் பார்த்தோம். இன்னும் அரச, தனியார் வாகனங்கள் பெற்றோல், டீசல் இன்றி நடுவீதியில் தவித்து நின்றதையும் தொழிற்சாலைகள் இயங்காமல், அதனால் தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் அவர்கள் பட்ட கஷ்டங்களையும் கண்டோம்.

அதுமாத்திரமின்றி, 'டீசல் இல்லை; பெற்றோல் இல்லை' என்று பதாதைகள் தொங்க விடப்பட்டிருந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில், பெற்றோலை எடுத்துவரும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான பவுசர் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலை விநியோகம் செய்துவிட்டுச் சென்ற பின்னர், அங்கு பெற்றோலும் விற்பனை செய்யப்படுகிறது; டீசலும் விற்பனை செய்யப்படுகிறது.

பெற்றோலையும் டீசலையும் ஒரே பவுசரில் எடுத்து வர மாட்டார்கள். அப்படி எடுத்து வந்தாலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலுக்கு, டீசலுக்கு என தனித்தனியாக உள்ள சேமிப்பு தாங்கிகளில் குறித்த எரிபொருளை பறிக்க வேண்டும். அப்படியாக இருந்தால், எரிபொருளை கொண்டுவரும் பவுசர் ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரண்டு தாங்கிகளில் எரிபொருளை நிரப்ப வேண்டும்.

ஆனால், ஒரு தாங்கிக்கு மாத்திரம் எரிபொருளை பறித்துவிட்டு எப்படி பெற்றோலும், டீசலும் ஒரே நேரத்தில் விநியோகம் செய்ய முடியும் . இதிலிருந்தே புரிகிறது, எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்களுடைய நாடகமே இது என நுகர்வோர் கேள்வி எழுப்புகின்றனர்.

அப்படி என்றால், ஏன் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையில் நிற்க வேண்டும் என்பது ஒரு கேள்வியாகவும் இருக்கிறது. ஒரு வாரத்திற்கு தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ள நிலையில், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருட்களுக்கு தட்டுப்பாடு எவ்வாறு நிலவ முடியும் என நுகர்வோர் கேள்வி எழுப்புகின்றனர்.

எனினும், அரசாங்கத்தின் விலை அதிகரிப்பை எதிர்பார்த்து, எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் எரிபொருட்களை பதுக்கி வைத்து, பார்த்துப் பார்த்து எரிபொருள் விநியோகம் செய்துவருகிறார்கள் . இது ஒரு 'வியாபார மாபியா' என்றும் நுகர்வோரான மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இந்த விடயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எரிபொருட்களை நுகர்வோருக்கு விநியோகம் செய்யாது பதுக்கி வைத்தால், அந்த எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறது.

அத்துடன், இலங்கை நுகர்வோர் அதிகார சபை உத்தியோகத்தர்களுடன், பொலிஸாரையும் இணைத்து, எரிபொருள் நிரப்பு நிலையங்களை சோதனையிட அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கிடையே, நாம் தற்போது பாரிய நெருக்கடிக்குள் சிக்கியுள்ளதாக ஒருசிலர் நினைக்கிறார்கள். ஆனால் உண்மை நிலைமை இதுவல்ல. நெருக்கடிகள் மார்ச் மாதமளவிலே உச்ச நிலையை அடையும். இந்த நெருக்கடிகளே இலங்கையின் எதிர்கால அரசியலைத் தீர்மானிக்கும் என்றும் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில அண்மையில் தெரிவித்திருந்தார்.

நாட்டில் வாகனங்களின் தேவைகள் அதிகரித்துக் காணப்படும் நிலையில், அதற்கு ஏற்ப எரிபொருள் தேவையும் முன்பை விடவும் இப்போது இரண்டு, மூன்று மடங்குகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும், கிடைக்கக்கூடிய எரி பொருட்களான டீசல், பெட்ரோல் அளவானது குறைந்து கொண்டே போகின்றது.

இந்த நிலையில் எரிபொருள் பாவிப்பதில் சிக்கத்தை கையாள வேண்டிய நிலைக்கு நுகர்வோரான மக்கள் விரும்பிய அல்லது விரும்பாமலோ தள்ளப்பட்டுள்ளனர். நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பெட்ரோலிய பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த எரிபொருள் சிக்கனம் அவசியமாகும்.

எரிபொருள் சிக்கனம் நமக்கு மட்டுமல்ல நம் எதிர்கால சந்ததியினருக்கும் அவசியமாகும். எனவே வாகன ஓட்டிகள் பெரிதும் இதில் கவனம் செலுத்த வேண்டும். எரிபொருள் சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டும்.

அத்துடன் இலங்கை அரசாங்கம் எரிபொருள் கொள்வனவுக்காக தற்போது எதிர்நோக்கியிருக்கும் டொலர் (நிதி) நெருக்கடியை சரி செய்ய இந்தியா, அரபு நாடுகள் உட்பட சர்வதேச நாடுகளிடம் உதவியை கோரியுள்ளது. எனினும் அவை கிடைக்காத பட்சத்தில் அதற்கு மாற்றுவழியாக சர்வதேச நாணய நிதியை நாடுவதே மிகச் சிறந்த வழிமுறையாகும்.








மட்டக்களப்பை அச்சுறுத்தும்

# இன்னொரு பயங்கரம்

வேகமாகப் பரவிவருகிறது தொழுநோய்



வ. சக்திவேல்
shagthivel@gmail.com

மட்டக்களப்பு மாவட்டத்தில், தொழுநோயின் (Leprosy) தாக்கம் அண்மைக் காலமாக அதிகரித்துவருவதாகவும் இதுஒரு தொற்று நோய் எனவும் ஆனால், சிலர் இதனை மறைக்க முற்படுவதாகவும் சுகாதாரப் பிரிவினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இலங்கையில் அதிகளவான தொழுநோயாளர்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இது தொடர்பில் மக்கள், போதிய அக்கறை காட்டவில்லையெனவும் இதற்கு ஒரு தனிக்குழு அமைக்கப்பட்டு, செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

சாதாரண தேமல் என்று நாம் நினைப்பது, ஆபத்தில் முடியலாம். எந்தவொரு நீண்டகால தோல் வியாதி காணப்பட்டாலும் உடனடியாகவே அருகிலுள்ள வைத்தியசாலைக்கோ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கோ சென்று ஆலோசனை பெறவேண்டும் எனவும் சுகாதாரத் தரப்பினர் வலியுறுத்துகின்றார்கள்.

அடுத்த மாதம் மட்டக்களப்பு மாவட்டம் பூராகவும் தொழுநோய் தடுப்பு நடவடிக்கைகள் மிகத்தீவிரமாக முன்னெடுக்கப்படவுள்ளது. அது தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று அண்மையில் நடைபெற்றுள்ளது. 2021 ஆம் ஆண்டு, இலங்கையில் 731 பேரும், அதிலே மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 110 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 2022 ஜனவரி மாதம் இலங்கை பூராகவும் 30 பேரும் அதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 18 பேர் டி தொழுநோயாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இது ஒரு பயங்கரமான நிலமையாக உள்ளது. இருந்தபோதிலும், இதை மிகவும் அவதானமாகக் கட்டுப்படுத்த வேண்டி இருக்கின்றது. இதற்காக, தேசிய தொழு நோய் தடுப்பு இயக்கம், அரச, அரசசார்பற்ற அமைப்புகள், ஊடகவியலாளர்களுடனும் இணைந்து, தொழு நோய் தடுப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதன்போது 50,000 பேர் வரையில் பரிசோதிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில், ஒரு வருடத்தில் சராசரியாக 100 - 130 பேர் அடையாளம் காணப்படுகின்றார்கள். இது சகல வயதுடையவர்களையும் ஆண், பெண் இருபாலாரையும் தாக்குகின்றது. இந்நோய் பீடிக்கப்பட்ட ஒருவருக்கு அதன் அறிகுறிகள் தென்படுவதற்கு மூன்று முதல் ஐந்து வருட காலம் எடுக்கும்.

மனிதனின் கை, கால், தோள்பட்டை, முகம் உள்ளிட்ட பல இடங்களில் வளக்கமான தோலின் நிறத்தைவிட சற்று வெளிறிக் காணப்படும். இதனை மக்கள் தேமல் என தெரிவிக்கின்றார்கள். உண்மையில் அது தேமல் இல்லை. இதனை அடையாளம் கண்ட தினமே வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றால் ஆரம்பத்திலேயே முற்றாகக் குணப்படுத்திவிடலாம். இல்லையேல், அவ்வாறு விட்டுவிட்டால் அது காலப்போக்கில் பெரிதாகி, அப்பகுதி அழுகும் நிலைமைக்குச் சென்றுவிடும்.



இந்நோயுள்ள ஒருவர், சிகிச்சை பெறாமல் தும்மினாலும் மில்லியன்கணக்கான பக்ரீரியாக்கள் வெளியில் சென்று, அச்சூழலிலுள்ள ஏனையோருக்கும் தொற்றிவிடும். ஆரையம்பதி, காத்தான்குடி, ஏறாவூர், செங்கலடி, மட்டக்களப்பு உள்ளிட்ட பல சுகாதார வைத்திய பிரிவுகளில், அதிமாக இந்நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். எனவே, மக்கள் தொழு நோய் தொடர்பில் இனிமேலும் அலட்சியமாக இருக்காமல், நோயின் அறிகுறிகள் ஏதும் தென்பட்டால், உடனடியாக அருகிலுள்ள வைத்தியாசாலைக்குச் சென்று பரிசோதித்து, உரிய சிகிச்சைகளைப் பெற வேண்டும். இல்லையேல், காலம் பூராகவும் உபாதையுடன்தான் வாழ்வைக் கொண்டு நகர்த்த வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்படும்.

பிரேசில், இந்தோனேசியா, இந்தியா ஆகியவையே அதிக நோய்ப்பளு உள்ள நாடுகளாக, சர்வதேச ரீதியில் அடையாளப்ப டுத்தப்பட்டுள்ளன. எனினும் இத்தொழுநோய் குணப்படுத்தக் கூடியதே. ஆரம்பக் கட்ட சிகிச்சையின் மூலம் ஊனத்தைத் தவிர்க்கலாம்.

இந்த ஊனமாக்கும் நோயை விரைவில் ஒழிக்க தீவிர முயற்சிகளையும் புதிய உறுதியையும் மேற்கொள்ளும் முகமாகவும் ஜனவரி மாதத்தின் இறுதி ஞாயிறு உலக தொழுநோய் தினம் கடைபிடிக்கப் படுகிறது. குழந்தைகளில் தொழுநோயால் ஏற்படும் ஊனத்தை, பூச்சியம் சதவிகிதம் ஆக்கும் இலக்கை அடைய ஆரம்பக்கட்ட நோய்கண்டறிதலில் முக்கியமாகக் கவனம் செலுத்தப்படுகிறது. மேலும், பரவலைத் தடுக்க சிகிச்சைகள் வலுப்படுத்தப் படுகின்றன.

மைக்ரோ பக்ரீரியம் லெப்ரே என்ற பாக்ரீரியாவால் உண்டாகும் ஒரு தொற்று நோயே தொழுநோய். மிகமெதுவாகப் பெருகுவதால் தொற்று ஏற்பட்டு 03 முதல் ஐந்து வருடங்கள் கழித்தே இந்நோய் அறிகுறிகள் தோன்றுகின்றன. இந்த நோய் பொதுவாகத் தோல், நரம்பு விளிம்புகள், மேல் மூச்சு மண்டலத்தின் உள்ளிட்டவற்றேயே பாதிக்கின்றன.

தொழுநோயாளியின் உடலில் இருந்து நோய்க்கிருமிகள் பரவும் முக்கிய வழி சுவாச மண்டலமாகும். குறிப்பாக மூக்கு. சிகிச்சை பெறாதவர்களோடு தொடர்ந்து தொடர்பு வைக்கும் போது, நோய்க்கிருமிகள் வாய், மூக்கு வாயிலாக சுவாச மண்டலத்துக்குள் நுழைகிறன. உடலுக்குள் நுழைந்த நுண்ணுயிரிகள் நரம்புகள், தோலை அடைகின்றன. ஆரம்பக் கட்டத்தில் கண்டறிந்து சிகிச்சை பெறாவிட்டால் நரம்புகளுக்கு மேலும் சிதைவு ஏற்பட்டு, நிரந்தர ஊனம் உண்டாகலாம்.

தொடர்ந்து சிகிச்சையை மேற்கொள்ளும் போது, நோய் முற்றிலுமாகக் குணப்படுத்தப்பட்டு, ஊனங்கள் தவிர்க்கப்பட்டு, பரவலும் தடுக்கப்படுகிறது. ஆரம்பக்கட்ட நோயறிதல், தகுந்த சிகிச்சை, முழுவேளை மருந்து தொழு நோயால் ஏற்படும் ஊனத்தைத் தடுக்கும். தொழுநோய் மரபுவழி நோயல்ல; இது பெற்றோரிடம் இருந்து பிள்ளைகளுக்குக் கடத்தப்படுவதில்லை. கைகுலுக்குதல், சேர்ந்து விளையாடுதல், சேர்ந்து பணிபுரிதல் ஆகிய வழக்கமான நடவடிக்கைகள் மூலம் தொழுநோய் பரவுவதில்லை. சிகிச்சை பெறாத நபர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளுவதால் பரவக் கூடும். தொழுநோய், பழைய பாவத்தாலோ கெட்ட நடத்தையாலோ ஏற்படுவதில்லை.

எனவே, 'வருமுன் காப்போம்' எனும் தொனிப்பொருளுக்கு இணங்க, மட்டக்களப்பை மெல்ல மெல்ல ஆக்கிரமிக்கும் பாரிய நோயாகக் கருதப்படும் தொழுநோயின் தாக்கத்திலிருந்து முற்றாக மீண்டெழுவதற்கு மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு குடிமகளுக்கும், பொறுப்புவாய்ந்த தாலையாய கடமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, மாவட்ட மக்களின் சுகாதாரத்தின் மீது அக்கறை கொண்டு செயற்படும் துறைசார்ந்தவர்களின் கருத்துகளைச் செவிசாய்த்து, அதன்படி உரிய சுகாதார நடைமுறைகளைக் கைக்கொள்ளும் பட்சத்தில், பரவிவரும் தொழுநோயிலிருந்து நாமும் பாதுகாக்கப்பட்டு பிறரையும் பாதுகாக்க திடசங்கற்பம் பூணவேண்டும்.



## ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை:

# மீள இயங்குமா?



சுப்பிரமணியம் பாஸ்கரன்

**முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையை மீள இயங்க வைப்பதன் மூலம், நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் தொழில் வாய்ப்புகளைப் பெற முடியும். இதை இயங்க வைப்பதற்கு, நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.**

"ஓட்டுபக்றியில் நல்ல வேலை இருந்தது. சந்தோசமாக வேலை செய்தோம். கைநிறைய வருமானம் கிடைத்தது. கஸ்டமில்லாமல் வாழ்ந்தோம். அதுபோல, எங்களுடைய பிள்ளைகளும் பேரப் பிள்ளைகளும் வாழவேண்டும் என்றால், இந்த ஒட்டு தொழிற்சாலை சரியாக இயங்க வேண்டும்" என்று ஓட்டுத் தொழிற்சாலையில் பணியாற்றிய குருசு முத்து செபஸ்தியாம்பிள்ளை (வயது 86) தெரிவித்துள்ளார்

> **இந்தக் கற்களுக்கு நல்ல கேள்வி இருந்தது. கற்கள் கப்பல்களில் ஏற்றுமதி செய்வது வழமை. அதாவது அந்த நாள்களிலேயே திருகோணமலை துறைமுகம் ஊடாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது**

1968ஆம் ஆண்டு ஆண்டு முதல் இறுதிக் காலப் பகுதி வரையும் ஒட்டு சுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையில் பணியாற்றிய குருசுமுத்து செபஸ்தியாம்பிள்ளை என்ற முதியவரை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "இந்தத் தொழிற்சாலையானது தரமான ஓடுகளையும் கற்களையும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாக இருந்தது. ஏனைய தொழிற்சாலைகளில் நிலத்துக்குப் பதிக்கப்படுகின்ற நிலக்கற்கள் செய்யப்படுவதில்லை. ஆனால் இங்கே அந்தக் கற்கள் செய்யப்படுகின்றன. இந்தக் கற்களுக்கு நல்ல கேள்வி இருந்தது. 40 இலட்சம் 50 இலட்சம் கற்கள் என்று கப்பல்களில் ஏற்றுமதி செய்வது வழமை. அதாவது அந்த நாள்களிலேயே திருகோணமலை துறைமுகம் ஊடாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் இன்று எதுவுமே இல்லை. அந்தக் காலத்தில் குறைந்த அளவு சம்பளம் தான் கிடைத்தது; கைநிறைய காசு இருந்தது. அச்சமில்லாமல் வாழ்ந்தோம். எங்களுடைய காலம் முடிவடைந்து விட்டது. இனி, எங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் இந்த தொழிற்சாலையில் வேலை செய்ய வேண்டும் என்று ஆசை. எவ்வாறு நாங்கள் இந்தத் தொழிற்சாலையில் தொழில் செய்து,சந்தோஷமாக வாழ்ந்தோமோ அதே போல எங்களது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் வாழ வேண்டும்" என்றார்.

இவ்வாறு, ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை இயங்க வேண்டும் என்பது பலரது ஏக்கங்களும் எதிர்பார்ப்புகளும் ஆகும்.

ஒட்டுசுட்டான், பண்டாரவன்னியன் ஓட்டுத்தொழிற்சாலை, யுத்தம் காரணமாக சேதமடைந்து, செயலிழந்து காணப்படுவதால், இதனை நம்பி வாழ்ந்த தொழிலாளர் குடும்பங்கள், பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டனர்; இன்றும் அந்த நெருக்கடிகள் தொடர்கின்றன.

1968 மே மாதம் 20ஆம் திகதி ஒட்டுசுட்டான் ஓட்டுதொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டது, அக்காலத்தில் 74 நிரந்தர ஊழியர்களும் நூற்றுக்கும் மேற்பட்ட தற்காலிக பணியாளர்களும் கடமையாற்றி வந்தனர். 200க்கும் மேற்பட்டவர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்கிய






> **ஓட்டுபக்றியில் நல்ல வேலை இருந்தது. சந்தோசமாக வேலை செய்தோம். கைநிறைய வருமானம் கிடைத்தது. கஸ்டமில்லாமல் வாழ்ந்தோம். அதுபோல, ஏங்களுடைய பிள்ளைகளும் பேரப் பிள்ளைகளும் வாழவேண்டும்**

ஓட்டுத்தொழிற்சாலை, 1990ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக செயலிழந்த நிலையில், இன்றுவரை இயங்கவில்லை.

பலகோடி வருமானத்தை ஈட்டக்கூடிய இந்தத் தொழிற்சாலையை இயங்க வைப்பதன் மூலம் பலரது வாழ்வில் ஒளியேற்ற முடியும் எனவும் இதனை இயங்க வைப்பதற்கு, விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பகுதியில் உள்ள மக்கள் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையின் வறுமை மிகுந்த மாவட்டங்களில் ஒன்றாக முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகின்றது. இவ்வாறு இந்த மாவட்டத்தின் வறுமைக்கு, முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 17,000க்கும் அதிகளவான இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்பின்றி இருப்பதே காரணமாக அறிய முடிகின்றது

குறித்த தொழிற்சாலை, 1990ஆம் ஆண்டுகளில் யுத்தம் காரணமாக, இதன் கட்டுமானங்கள் சேதமடைந்து, ஓடு உற்பத்தி கைவிடப்பட்டதுடன் அதற்கான சகல கட்டுமானங்களும் அப்படியே விடப்பட்டிருந்தன. தற்போது இதனை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கபட்டு வருவதாகவும் குறிப்பாக துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இயந்திரங்களைப் பொருத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கபட்டுள்ளதுடன் மின்னிணைப்பு வேலைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அடுத்த மாத இறுதியில் இதன் வேலைகள் நிறைவு பெற்று இயங்கவுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இந்த தொழிற்சாலை, மீளவும் இயங்குமானால் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் நேரடியான தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் நிலை ஏற்படும். இதனை விட மேலும் பல வர்த்தகர்கள், பொதுமக்கள் நன்மையடையக்கூடிய வாய்ப்புகள் ஏராளமாகவே உள்ளன.







# ஊரின் முகம்

## நரகக் குழியாக மாறிவிட்டது



அ. அச்சுதன்

**கிழக்கு மாகாணத்தில் காணப்படும் மூன்று மாவட்டங்களில், திருகோணமலை மாவட்டமும் ஒன்றாகும். இது கிழக்கு மாகாணத்தின் வடதிசையில் அமைந்துள்ளது. திருகோணமலை மாவட்டம் வடமாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் இணைக்கும் முக்கிய மாவட்டமாகத் திகழ்கின்றது.**

இம்மாவட்டம் அதிகளவான கடல் வளங்களையும் காட்டு வளங்களையும் நீர்வளங்களையும் கொண்டுள்ளது. மேலும், இம் மாவட்டத்தில் கிழக்கு மாகாண சபை, மாகாண அமைச்சுகள், மாகாண திணைக்களங்கள் காணப்படுகின்றமை விசேட அம்சமாகும்.

> **அழகான இயற்கை வளங்கள் நிறைத்த இப் பகுதியில் உள்ள கரையோர மூலவளங்கள், உயிரினங்கள், தாவரங்கள் ஆகியன அழிவடைவதற்கான சூழல், இங்கு கொட்டப்படும் கழிவுகளால் ஏற்படுகின்றது. ஆரோக்கிய வாழ்வும் தடைசெய்யப்படுகின்றது**


திருகோணமலை மாவட்டத்தில் 11 பிரதேச செயலக பிரிவில் மூதூரும் ஒரு பிரதேச செயலகப் பிரிவாகும். மூதூர் பிரதேசத்தின் பெரும் பகுதிகள் கடல், ஆறுகளால் சூழப்பட்டுள்ளதாலும் மகாவலி கங்கை போன்ற நதிகள் இங்கு கடலுடன் கலப்பதாலும் இப்பிரதேசம் இயற்கையாகச் சிறப்படைகின்றது. கண்டல் தாவரங்கள், கழிமுகங்கள், களப்புகள், பவளப் பாறைகள், வயல்கள், கடற்புற்கள், கடல் வாழ் உயிரினங்கள் வாழ்வதற்கு உகந்த இடங்களும் காணப்படுகின்றன.

இந்த நிலையில், மூதூர் நகர, நகரத்தை அண்டிய குப்பைகள் கழிவுப் பொருட்களை, கட்டைபறிச்சான் பாலத்தை அண்டிய வீதிக்கு அருகில் கொட்டப்படுகின்றன.

இந்த இடத்தில், சில ஆண்டுகளுக்கு முன்னர், மூதூர் பிரதேச சபையால் பயன் படுத்தப்பட்ட குப்பைமேடு, பல முறைப்பாடுகளின் பின்னர் அகற்றப்பட்டதுடன் சுற்று வேலியும் அமைக்கப்பட்டது. ஆயினும், தற்போது மீண்டும் அப்பகுதியில் குப்பைகள், கழிவுப் பொருட்கள் கொட்டப்படுகின்றன. விலங்கு கழிவுகளை, குப்பைகளை நாய்களும் காகங்களும் பருந்து போன்ற பறவைகளும் கவறைக்கொய்யான், நீர் நாய் போன்ற நீர் வாழ் உயிரினங்களும் இழுத்துவந்து, வீதியிலும் சுற்றயல் பகுதிகளிலும் போடுவதால் அப்பகுதி ஒரு நரகக் குழியாக மாறிவிட்டது.









தினசரி சுமார் 5,000 இற்கும் அதிகமானோர் இவ் வீதியால் பயணம் செய்கின்றனர். மூதூரின் கிழக்கு கிராமங்கள் அனைத்துக்கும் இதுவே நுழைவாயில்; ஊரின் முகம். கட்டைபறிச்சான் பாலம் தொடக்கம் 300 மீற்றர் தூரத்துக்கு, சுவாசிக்க முடியவில்லை; கழிவுகள் அழுகி துர்நாற்றம் வீசுகிறது; கோழி குடல், இறக்கை கழிவுகள், போத்தல் ஓடுகள், முள் மரச் செடிகள், பொலித்தின் கழிவுகள் மட்டிச் சிப்பிகள், இறந்த கோழி என்பவை மனம் கூசாமல் இங்கு கொட்டப்படுகின்றது.

காலையில் அலுவலகங்களுக்குச் செல்லும் உத்தியோகத்தர்களும் வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகளும் இப்பாதையால் செல்லும் போது மிகுந்த அருவருப்புடனும் வெறுப்புடனுமே செல்கின்றனர். பின்னர் மீண்டும் வீடு செல்லும் போதும், இதே வேதனை வெறுப்பு; ஒரு வித மன உளைச்சலுடனேயே பயணம் செய்ய வேண்டிய அவலநிலை உருவாகியுள்ளது.

மூதூரின் குப்பைத் தொட்டியாக மாறிவரும் இப்பகுதி, அழகான இயற்கை வளங்கள் நிறைத்த பகுதியாகும். குறிப்பாக, இப் பகுதியில் உள்ள கரையோர மூலவளங்கள், உயிரினங்கள், தாவரங்கள் ஆகியன அழிவடைவதற்கான சூழல், இங்கு கொட்டப்படும் கழிவுகளால் ஏற்படுகின்றது. அத்துடன், சூழலும் மாசு படுகின்றது; ஆரோக்கிய வாழ்வும் தடைசெய்யப்படுகின்றது.


இவ் விடயம் பற்றி, கிழக்கு பல்கலைக்கழக மாணவனும் மூதூர் கிழக்கை அடையாளப்படுத்தும் சம்பூர் தெ. கரிதரன் கருத்து தெரிவிக்கையில், "மூதூர் கிழக்கு பிரதேச கிராமங்களின் பிரதான நுழைவாயிலாக காணப்படுகின்ற கட்டைபறிச்சான் பாலத்துக்கு அண்மையில்,சரியான கழிவு முகாமைத்துவம் இன்றி, குப்பை கொட்டப்படுவது மிகவும் வேதனைக்குரியது. கொட்டப்பட்ட குப்பைகளில் இருந்து வருகின்ற துர்நாற்றம் மற்றும் அதன் பாதிப்பு, பாரிய சவாலாக உள்ளது. இங்கு கழிவுகள் கொட்டப்படுவதன் மூலம், சூழல் மற்றும் பொருளாதார ரீதியான பாதிப்புகளும் ஏற்பட வழி ஏற்படுகின்றன. ஏனெனில் கழிவுகளை கால்நடைகளும் பறவைகளும் சிதைத்து, அங்கும் இங்கும் அலைக்கழித்து போடுவதால் சுற்றுச்சூழல் பாதிப்படைகின்றது. அத்தோடு நோய்களும் ஏற்பட காரணியாக இது அமைகிறது. அருகில் ஆறு காணப்படுவதால், அதுவும் மாசடைவதற்கான வாய்ப்பு உள்ளது. இதனால் நீர் வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுவதோடு,

> **கழிவுகளை கால்நடைகளும் பறவைகளும் சிதைத்து, அங்கும் இங்கும் அலைக்கழித்து போடுவதால் சுற்றுச்சூழல் பாதிப்படைகின்றது. அத்தோடு நோய்களும் ஏற்பட காரணியாக இது அமைகிறது**

அதை நம்பி தொழில் செய்கின்ற மக்களின் வாழ்வாதாரமும் அழிந்து போகும் நிலை ஏற்படும்.

இதனால் தகுந்த முறையில் கழிவு முகாமைத்தவம் செய்யப்பட்டு, குறித்த பகுதி மக்கள் நிம்மதியாக நடமாடக் கூடிய சூழலை மாற்றியமைக்க வேண்டும்" என்றார்.

என்ன ஆச்சரியம்! குப்பைகள், கழிவுப் பொருட்கள் கொட்டப்படும் குறித்த பகுதியில், மூதூர் பிரதேச சபையால் 'இவ்விடத்தில் குப்பை போடாமல் தூய்மையாக வைத்திருக்கவும்' என்ற அறிவித்தல் பலகை காட்சி தருகின்றது. ஆனால், அங்கு நடப்பவை என்ன? குறித்த பகுதியில் குப்பைகளை போடுவதை தடைசெய்வதற்கு உரிய நடவடிக்கையை மூதூர் பிரதேச சபை இனியாவது எடுக்குமா? அல்லது சூழலை பாதுகாக்கும் அமைப்புக்கள் இவ்விடயத்தில் கவணம் எடுப்பார்களா? என பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.





# படிப்பினைகளை சமாதானத்துக்காகப் பயன்படுத்துவதே புத்திசாலித்தனம்

உக்ரேன் மீதான ரஷ்யாவின் முழுவீச்சிலான ஆக்கிரமிப்புக்குப் பின்னர், ஒவ்வொரு நாடுகளிலும் ஒவ்வொரு வகையிலான அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது. இந்நிலைமை நீடிக்குமாயின் அடுத்தடுத்தகட்டமாக என்னவெல்லாம் நடக்கும் என்பது தொடர்பில் மக்கள் யூகிக்கத் தொடங்கிவிட்டனர்.

'பிரித்தாழுதல்' எனும் சிந்தனையின் வெளிப்பாடாகவே, ரஷ்யா-உக்ரேன் யுத்தத்தை, அரசியல் ஆய்வாளர்கள் பார்க்கின்றனர். அதனால்தான், உலக நாடுகளில் பல நாடுகளின் தலைவர்களும் பன்னாட்டு அமைப்புகளின் முக்கியஸ்தர்களும் கடுமையான கண்டனங்களை தெரிவித்துள்ளனர்.

இன்னும் சில நாடுகள், எந்தவொரு தரப்பின் செயற்பாடுகளையும் நியாயப்படுத்தாது, இரு தரப்பினரையும் அவதானித்துக் கொண்டிருக்கின்றன. இதற்கிடையில், அவ்விரு நாடுகளிலும் சிக்கிக்கியிருக்கும் தத்தமது நாடுகளைச் சேர்ந்தவர்களை மீட்டெடுக்கும் செயற்பாடுகளிலும் சில நாடுகள் குதித்துள்ளன. வான்பரப்புகள் மூடப்பட்டமையால், விமானங்களை அனுப்பி, தமது நாட்டின் பிரஜைகளை மீட்டெடுப்பதில், பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. உக்ரேனின் என்ன நடக்கிறது என்பதை அழிவுகளின் சிதைவுகள் படம்பிடித்து காண்பித்துள்ளன.

எனினும், பொதுமக்கள் செறிந்துவாழும் பகுதிகளை இலக்குவைக்கவில்லையென தெரிவித்திருக்கும் ரஷ்யா, இராணுவ இலக்குகளையும் இராணுவத் தளபாடங்களையும் குறி வைத்தே தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என அறிவித்துள்ளது.

கண்டங்களை மட்டுமே தெரிவித்துவிட்டு, கைகளைக் கட்டி வேடிக்கைப் பார்ப்பதை நிறுத்திவிட்டு, உடனடியாக சமாதான உடன்படிக்கையொன்றுக்கு செல்வதே சிறந்த வழி. அவ்வாறு செய்யாதவிடத்து, அது மூன்றாம் உலக போருக்கே வித்திடும்.

ரஷ்ய படையினரை 'அமைதி காப்புப் படையினர்' என்ற வார்த்தையை ஜனாதிபதி புட்டின் பயன்படுத்தி அழைத்திருந்தார். அதனை ஐ.நா பொதுச்செயலர் அந்தோனியோ மானுவல் டி ஒலிவீரா குத்தேரசு திட்டவட்டமாக நிராகரித்தார்.

ரஷ்யாவின் பக்கமாகவா அல்லது உக்ரேனுக்கு ஆதரவாகவா நிற்பது என்பது தொடர்பில் யோசித்துக்கொண்டிருக்காமல், போர்நிறுத்த உடன்படிக்கைக்குச் சென்று, அங்கு சமாதானம் ஏற்படுவதற்கு உலகநாடுகளின் தலைவர்கள் ஓரணியில் திரளவேண்டும் என்பதே சமாதான விரும்பிகளின் விருப்பமாகும்.

பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தையின் மூலமாக தீர்வுகாண்பதற்கு, கிடைக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முயல வேண்டும். ஆயுதங்களின் ஊடாக பலத்தை காண்பிக்க முயல்வது, இரத்தக்களரிக்கே வழிசமைக்கும். நான் பெரியவன்; நான்தான் வலிமையானவன் எனும் தலைவீங்கும் தனத்தை உடனடியாகக் கைவிடவேண்டும்.

ரஷ்யா-உக்ரேன் மோதல், உலகிலுள்ள ஏனைய நாடுகளில், ஏதோவொரு விதத்தில் தாக்கத்தை செலுத்தும். அதுதான் உண்மையும் கூட, ஆகையால், இதற்கு முன்னர் செய்துகொள்ளப்பட்ட பன்னாட்டு சமாதான உடன்படிக்கைகளை அச்சொட்டாக கடைப்பிடிப்பதன் ஊடாக, சமாதானத்தை எதிர்பார்க்கலாம்.

முதலாம், இரண்டாம் உலகக் போர்களின் வடுக்கள் இன்னுமே மாறவில்லை. அதிலிருந்து மீண்டெழுவதற்கு ஒவ்வொரு நாடும் பட்ட கஷ்டங்கள் ஏராளம் ஏராளம்!

ஆகையால், கடந்தகால கசப்பான படிப்பினைகளை நிகழ்கால சமாதானத்துக்காகப் பயன்படுத்துவே புத்திசாலித்தனம். இதனூடாக மூன்றாவது உலகக் போரொன்று ஏற்படுவதை தவிர்க்கலாம்.


தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk

எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

உங்களுக்குப் பிடிக்காத எவரையும் பொதுவெளயில் விமர்சனம் செய்தலாகாது. இது நாகரிகமான செயலும் அல்ல!

ஒருவரைப் பிடிக்காவிட்டால், அமைதியாக இருங்கள். பகைமையை உருவாக்கலாகாது. உங்களிடமும் தவறுகளும் குறைபாடுகளும் இருக்கலாம். நீங்கள் செய்யும் காரியங்கள்தான், சரி என அடம்பிடிக்கலாகாது. சிலசமயங்களில், இவைகூட மிக அற்பமான விடயமாக இருக்கும்.

தங்களுக்குள் நடக்கும் பிரச்சினையை பொது இடங்களில் விளம்பரப்படுத்தலாமா? பல விடயங்கள் பெரிதாகி, மனங்தாபம் கொள்வதற்கு, பொறுமை இன்மையும் கோபமும் காரணமாகின்றது. சில விடயங்களைக் கண்டுகொள்ளாமல் விடுவது புத்திசாலித்தனமானது.

மனிதன் ஒற்றுமையைப் பற்றி பிரமாதமாகப் பேசுவான். ஆனால், தன்வசமிழந்து, அன்பு நிலையில் இருந்து விடுபட்டுவிடுகின்றான். தன்னை மட்டுமே நோக்குபவன், பிறர் மனதைக் கண்டுகொள்வதில்லை.

நெருப்பான வார்த்தைகளைக் கூசாமல் பேசிவிடுகின்றனர். பிறர் மனதைத் துவைத்துவிடுதல் தேவையா? பாவம் செய்யப் பயப்பிட வேண்டும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தமிழர் வரலாற்றில் ஏமாற்றங்கள்

**லக்ஸ்மன்**

ஏமாற்றங்கள், தமிழர் வரலாற்றில் மறக்கப்பட முடியாத, மாற்றப்பட முடியாத ஒன்றாகவே இருந்து வருகிறது. அது நம்மவர்களாலும் நண்பர்களாலும், எதிரிகளாலும் கூட நிகழ்த்தப்பட்டிருக்கிறது. நமது முயலுமைகள் பயனற்றுப் போதல் என்பதும், எதிர்பாராமலே நம் எதிர்பார்ப்புகள் நிகழாமல் போதலும், நிகழாமலாக்கப்படுவதும் இந்த ஏமாற்றங்களுக்குள் அடக்கம்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கெதிராக முன்னெடுக்கப்பட்ட பெரும்பான்மையினரின் நெருக்குதல் நடவடிக்கைகளால் உருவானதே இனப்பிரச்சினையாகும். அதனைக்கூட, இந்த நாட்டுக்குள் அவ்வாறு ஒரு பிரச்சினையுமில்லை என்று சொல்லும் தலைவரே நமது நாட்டில் இருக்கிறார். இதற்கு குறிப்பிட்டளவு தமிழர்களும் உடந்தை.

வரலாற்றுக் காலம்தொட்டு ஏமாற்றப்பட்ட தமிழினத்தினை மேலும் அடக்குவதற்கும் ஒடுக்குவதற்கும் அடிபணிய வைப்பதற்குமாக உருவாக்கப்பட்டதுதான் பயங்கரவாதத் தடைச்சட்டம். அப்போதிலிருந்து அச்சட்டத்தினை பழிவாங்கும் சட்டமாக எல்லோரும் பார்த்தனர்; இப்போதும் பார்க்கின்றனர்.

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டமானது 1979ஆம் ஆண்டில் 48 ஆம் இலக்கச் சட்டமாக 6 மாதங்களுக்கான தற்காலிகமான ஏற்பாடாகக் கொண்டு வரப்பட்டு, பின்னர் அது 1983 இல் நிரந்தர சட்டமாக்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டம் ஜே.ஆர்.ஜயவர்தனா ஜனாதிபதியாக இருந்த போது கொண்டு வரப்பட்டதாகும். இந்த சட்டம் அரசியல் யாப்புக்கே முரணானது என்றுதான் சொல்லப்பட்டது. ஆனால் இப்போதுவரை இருந்தே வருகிறது.

ஒருவர் தன்னுடைய கருத்தை பொதுவெளியில் அல்லது, சமூக ஊடகங்களில் கூட பகிர முடியாத நிலை பயங்கரவாதச் சட்டத்தால் ஏற்பட்டிருக்கிறது. அரசியல் ரீதியான நெருக்கடிகள், சர்வதேச ரீதியிலான நெருக்கடிகளுக்காக தற்போது அதில் மாற்றத்தினை ஏற்படுத்துகிறோம் என்று பூச்சாண்டி காட்டுகின்ற செயற்பாடே அரசாங்கத்தால் நடைபெறுகிறது. இதுவும் ஒருவகையிலான ஏமாற்றே.

இருந்தாலும், இந்தச் சட்டம் ஆயுதப் போராளிகளை மட்டுமல்லாமல் அப்பாவித் தமிழர்களையும் பழிதீர்த்தது. வடக்கு கிழக்கு தமிழர்கள் எல்லோரும் 'புலிகள்' என்ற போர்வையொன்று போர்த்தப்பட்டு, கடந்த காலங்களில் நடத்தப்பட்ட கொடுமை சொல்லொணாதது. யுத்தம் முடிவுக்கு வந்து 13 வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால் இன்னமும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் சிறைகளில் வாடுகின்றனர். வழக்குத் தாக்கல் செய்யப்பட்டும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டாமலும் இருந்து கொண்டிருக்கிறது.

தமிழர்கள் யாழ்ப்பாண இராஜியத்தை போர்த்துக்கேயரிடம் இழந்து அவர்களால் நாடு ஒருங்கிணைக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்குள் வாழ்ந்து பின் பிரித்தானியரால் நாடு கையளிக்கப்பட்டபோது சிங்களவர்களின் ஆளுகைக்குள் சிக்குண்ட தமிழர்கள், அன்றிலிருந்தே போராட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டனர். தொடர்ந்தும், தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு முன்வைக்கப்படாததால் அகிம்சைப் போராட்டம், ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது.

ஆனாலும் தீர்வின்றி யுத்தங்களும் பேச்சுக்களும் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டது. ஆனால், தமிழர்களை வென்றதாகக் கருதி அவர்களுக்கான தீர்வை இன்னமும் இலங்கை அரசாங்கம் வழங்காமலேயே மௌனம் காத்துக் கொண்டிருக்கிறது.

இந்தநிலையில், விடுதலைப் போராளிகளை மட்டுமல்லாமல் அப்பாவித் தமிழர்களையும் அடக்குவதற்காக, அழிப்புகள் செய்வதற்குமான பயங்கரவாத தடைச்சட்டம் என்னும் பயங்கரச்சட்டத்துக்கெதிராக கையெழுத்துப் போராட்டம் ஒன்றினை இலங்கை தமிழரசுக்கட்சி முன்னெடுத்து வருகிறது. முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கொழும்பு, கிளிநொச்சி, காரைதீவு, கல்முனை என்றும் இன்று சனிக்கிழமை திருகோணமலையிலும் நடைபெறவிருக்கிறது. இதில் மதத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கையொப்பமிட்டு வருகின்றனர். 44 வருடங்களை எட்டுகின்ற பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அரசியலமைப்பிலிருந்து நீக்குவதற்கான இந்த முயற்சி, வெற்றியளிக்க வேண்டும் என்று கடவுளை வேண்டுவதைத் தவிர, தமிழர்களுக்கு வேறு வழியில்லை.

இந்த இடத்தில்தான், திட்டமிட்ட இன அழிப்பைச் செய்து கொண்ட பெரும்பான்மையின அரசாங்கத்துக்கு இக் கையெழுத்துப் போராட்டம் மூலம், என்ன தகவலைச் சொல்லப் போகிறோம் என்ற கேள்வி தோன்றுகிறது.

பயங்கரவாதத்தை ஒழித்ததாக அல்லாமல் குற்றவாளிகள் கணிசமானவரை உருவாக்கிய சட்டமாக மாறியிருக்கின்ற பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்து இப்போதும், ஜனநாயகத்திற்குள் சர்வாதிகாரத்தினைப் புகுத்துவதற்கும் பயங்கரவாதத்தடைச்சட்டம் வழிவகுத்தது. அதேவேளை ஆட்சியாளர்கள் தமது தேவைக்கு ஏற்ப, எதிரானவர்களைப் பழிவாங்குவதற்கு இந்தச் சட்டம் உதவியுள்ளது. வழக்குகள் தாக்கல் செய்யாமல் 10 ஆண்டுகளுக்கு ம் மேல் கைதிகளைத் தடுத்து வைப்பதற்கும் சித்திரவதைகள் செய்வதற்கும் இந்த சட்டம் உதவுகின்றது.

மேல் மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் அசாத்சாலி, அரசாங்கம் பற்றி விமர்சனக் கருத்துகளை முன்வைத்தமைக்காக பல மாதங்கள் சிறையில் தள்ளப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ கைது செய்யப்படுவதற்கான அச்சுறுத்தலை எதிர்நோக்கினார். இவ்வாறு எதிர்க்கட்சியினரையும் அவர்களது ஆதரவாளர்களையும் வறுத்தெடுக்கும் செயற்பாடுகள் தொடர்ந்து வருகின்றன.

இந்த நிலையில்தான், எதிர்ப்புகள் விமர்சனங்கள் இல்லாத அரசியல், ஜனநாயகமற்ற அரசியல் நடைபெறுகின்ற நாட்டில் ஜனநாயக அரசியல் முறைமைகளின் ஊடான முயற்சிகளுக்குப் பலன்கிடைக்குமா என்று எண்ணத் தோன்றுகிறது.

யுத்தம் மௌனிக்கப்பட்டு பல வருடங்களாக நடைபெறும் போராட்டங்களுக்கும், முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்கும் பதிலே இல்லாமல், தீர்வுகள் இன்றி ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்களை மிரட்டும் செயற்பாடுகள், கைது செய்யும் செயற்பாடுகள் தொடர்கின்றன. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு ஆட்சியாளர்களால் பொறுப்புக் கூற முடியவில்லை. சிலரை சிறையில் அடைப்பதன் மூலமாகவும், அடக்குவதன் மூலமாகவும் சிறைக்கு வெளியிலுள்ள பலருக்கு அச்சுறுத்தல் விடப்படுகிறது.

ஜெனீவா அரங்கு தொடங்குகிறது. இந்தத் தொடக்கம் தமிழ் மக்கள் மனங்களில் மகிழ்ச்சியாக நோக்கப்படுவதே வழக்கம். இந்தத் தடவையிலும் அந்த மகிழ்ச்சி இருக்கத்தான் செய்யும். ஆனால், அரசாங்கத் தரப்பு அதனை வெற்றிகரமாக வெல்லவே போகிறது. அதற்குப் பின்னும் தமிழர்களின் முயற்சி தொடரவே செய்யும்.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்று ஆறு தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து இந்தியாவுக்கு கோரிக்கை விடுத்துள்ளன. இதில் இணைக்கப்படவிருந்த மலைகயக் கட்சிகள் தங்களுடைய தனியான திட்டத்தினைத் தயாரித்திருக்கின்றன. தமிழ் பேசும் இனமான முஸ்லிம்கள், தமிழர்களுடன் இணைந்து நாட்டுக்குள் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்குத் தயாரில்லாதவர்களாக இருக்கிறார்கள்.

70 வருடகாலமாக நடைபெறும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டம் எனும் இனப்பிரச்சினை, நீண்ட நெடுங் கயிறாகவே இருக்கிறது. யாரைக் குற்றம் சொல்வது என்று தெரியாமலேயே தொடரும் இந்த முயற்சியில் அலுத்து, சலித்துப் போய் ஒதுங்கிப் போனவர்கள் அதிகம் என்றிருக்கின்ற நிலையில், தமிழர்களின் ஏமாற்றம் இன்னமும் தொடரத்தான் போகிறது. அதில் மாற்றுக் கருத்துகள் இல்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டமும், இருபதாவது யாப்புத் திருத்தமும் ஆட்சியாளர்களுக்கு இனிப்பாக இருக்கும் நிலையில், நாட்டின் பெரும்பான்மை ஆட்சியாளர்கள் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு எதையும் கொடுத்துவிடப் போவதில்லை. இருந்தாலும் தமிழர்களிடமில்லாத ஒற்றுமையானது அவர்களை மேலும் குழிக்குள் தள்ளுவதாகவே இருக்கும்.

அமெரிக்க இரட்டைக் கோபுரம் மீதான தாக்குதல் உள்ளிட்ட உலக அரங்கில் இடம்பெற்ற சில நிகழ்வுகளையும் அதைத்தொடர்ந்து ஏற்பட்ட கொள்கை மாற்றங்களையும் சாதகமாகப் பயன்படுத்திய இலங்கை அரசாங்கம், மேலும் பல மேலை நாடுகளது உதவிகளுடன் விடுதலைப் புலிகள் மீது இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்தது. இது விடுதலைப்புலிகளை 2009ஆம் ஆண்டு மே மாதத்தில் தோல்வியடையச் செய்தது.

இப்போது தமிழர்கள் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக முன்னெடுக்கும் இராஜ தந்திர அகிம்சைப் போராட்ட முயற்சிகளை முறியடிப்பதற்கும் இலங்கை அரசாங்கம், நாடுகள் பலவற்றை ஐக்கிய நாடுகள் சபை அமர்விற்கு தமக்கு ஆதரவாக கூட்டுச் சேர்க்கும் முயற்சியையே கொண்டு நகர்த்துகிறது.

இலங்கை தமிழர் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமலே உள்ள நிலையில், மிதவாத அரசியல்வாதிகளின் கைகளில் இருக்கின்ற தமிழர்களின் அரசியல் வெற்றியளிக்குமா என்பதுதான் சந்தேகம்.

வெளிநாடுகளின் புலம்பெயர்ந்திருப்பவர்களின் முயற்சி, நாட்டுக்குள்ளேயே 13லிருந்து தொடங்கவேண்டும், அதனை முழுமையாக அமல்படுத்த வேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் என்று போராட்டம் நடத்துபவர்கள், அது வேண்டாம் என்பவர்களும் சாதிக்க நினைப்பது ஏமாற்றமில்லாததாக இருக்கட்டும்.

## கடிதங்கள்

### கிராமங்களுக்குள் குரங்குகளின் தொல்லை

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திலுள்ள பல கிராமங்களுக்குள் குரங்குகள் ஊடுருவுவதால், அப்பகுதிகளிலுள்ள மக்கள் பலத்த அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு வாவியோரத்தில் இருக்கும் காண்ணா பற்றைகளில் இரவில் தங்கியிருக்கும் இக்குரங்குகள், பகல் வேளைகளில் களுதாவளை, களுவாஞ்சிகுடி, தேத்தாதீவு, மாங்காடு உள்ளிட்ட பல கிராமங்களுக்குள் உட்புகுந்து, அங்குள்ள தோடங்களிலுள்ள காய்கறிகளையும் வீடுகளிலும் உள்ள பழமரங்களையும் சேதப்படுத்தி வருவதாக அப்பகுதி மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

எனவே, தாம் பெரும் பிரயத்தனத்திற்கு மத்தியில் மேற்கொள்ளும், மேட்டுநில விவசாயச் செய்கையை குரங்குகளின் அழிவிலிருந்து பாதுகாப்பதற்கு, தகுந்த பொறிமுறை ஒன்றையும் பொறுப்பு வாய்ந்தவர்கள் அமல்படுத்த வேண்டும் என அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

எம். செந்தூரன்




Mr. Dushyantha Vithanage
Senior Scout M.S Ubaidurrahman

# கொழும்பு சாரணர்கள்

**4 வது கொழும்பு சாரணர் இளைஞர் மன்றத்தின் மூலமாக முடிவெடுப்பதில் இளைஞர்களின் ஈடுபாட்டை கொழும்பு சாரணர்கள் வலுப்படுத்தும் என்று இலங்கை சாரணர் சங்கம் கொழும்பு மாவட்டக் கிளை அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

4வது கொழும்பு சாரணர் இளைஞர் மன்றமானது, கொழும்பில் உள்ள பல்வேறு சாரணர் துருப்புக்கள் மற்றும் திரிசாரணர் குழுவினரின் சிரேஷ்ட மற்றும் திரி சாரணர்களை அதிரடியானதொரு 3 நாள் நிகழ்வுக்காக ஒன்றிணைத்து, இலங்கை சாரணர் சங்கம் - கொழும்பு மாவட்டக் கிளையின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பரிந்துரைகளைப் பற்றி பகுப்பாய்ந்து, கலந்துரையாடி, பின்னர் தொகுப்பதற்காக அவர்களை வழிவகுக்கும்.

கொழும்பு சாரணர் இளைஞர் மன்றத்தில் பங்குபற்றும் பிரதிநிதிகள், கொழும்பில் சாரணியத்தை மேலும் மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குவதைத் தாண்டி மேலதிகமாக எதிர்வரும் ஆண்டிற்கான கொழும்பு சாரணர் இளைஞர் ஆலோசனைக் குழுவையும் (CSYAG) தெரிவு செய்வார்கள். கொழும்பு சாரணர் இளைஞர் ஆலோசனைக் குழுவின் தலைவராக 2021/22 ஆண்டுகளில் செயற்படுகின்ற சிரேஷ்ட சாரணர் எம்.எஸ்.உபைதுர்ரஹ்மான் தனது அனுபவத்தை பற்றி கூறுகையில், "கடந்த ஆண்டு முழுவதும் CSYAG இன் இந்த ஆற்றல்மிக்க இளம் குழுவை வழிநடத்த முடிந்ததை எண்ணி நான் பெருமையாக உணர்கிறேன். CSYAG அமைப்பானது கொழும்பில் உள்ள சாரண இளைஞர்களின் யோசனைகள் மற்றும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான அனைத்து சுதந்திரம், ஊக்கம் மற்றும் வளங்களை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது." எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதையடுத்து மாவட்ட திரிசாரணர் தலைவரும் 4வது கொழும்பு சாரணர் இளைஞர் மன்றத்தின் இயக்குனருமான திரு. துஷ்யந்த விதானகே அவரது கருத்தை கூறுகையில், "கொழும்பு சாரணர் மேலாண்மையின் முக்கிய முன்னுரிமைகளில் இளைஞர் ஈடுபாடும் ஒன்றாக அமைகிறது. மேலும் வருடாந்தம் நடத்தப்படுகின்ற இளைஞர்

## கொழும்பு சாரணர் நாட்காட்டியில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இளைஞர் நிகழ்வின் 4வது அத்தியாயம் 2022 பெப்ரவரி 25 முதல் 27 வரை நடைபெறும்.

## கொழும்பு சாரணர் இளைஞர் மன்றம், கொழும்பில் உள்ள சாரணியம் மேற்கொள்ளும் இளைஞர்கள் மாவட்டக் கிளையின் முடிவெடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக ஒரு தளத்தை உருவாக்குகிறது.

## இளைஞர்களால், இளைஞர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட இந்த மன்றத்தில் கொழும்பில் உள்ள 70க்கும் மேற்பட்ட சிரேஷ்ட மற்றும் திரி சாரணர்கள் ஒன்றுகூடுவார்கள்.

மன்றம், முக்கியமாக இவ்வருடம் 'சாரண மெய்ப்பொருளை மீண்டும் தூண்டிவிடல்' என்ற கருப்பொருளின் கீழ் நடாத்தப்படும் நிகழ்வு, இளைஞர் ஈடுபாட்டினை வலுப்படுத்தும் எமது உத்தியில் ஒரு அஸ்திவாரமாக செயல்படுகிறது. இம்மன்றம் சாரணர்களுக்கு தம்மை கொழும்பு சாரணர் மேலாண்மை மற்றும் நிர்வாகத்தின் ஒரு பகுதியாக நிலைநிறுத்திக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கிறது." எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் முதன்மையான சாரணர் மாவட்டமாக கருதப்படும் கொழும்பில் 11,000 இற்கும் மேற்பட்ட சிங்கிதி, குருளை, கனிஷ்ட சாரணர், சிரேஷ்ட சாரணர் மற்றும் திரிசாரணர்களை உள்ளடக்கிய 50 இற்கும் மேற்பட்ட சாரணர் குழுக்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. கொழும்பில் சாரணியம் ஆனது, சாரணர்களை சுறுசுறுப்பான குடிமக்களாக மேம்படுத்துவதிலும், அவர்களது சமூகங்களில் சாதகமான மாற்றங்களுக்கு வழிவகுப்பதிலும் கவனம் செலுத்துகிறது.

இலங்கை சாரணர் சங்கம் - கொழும்பு மாவட்டக் கிளை, மாவட்ட அளவில், பிரிவுகள் மட்டத்தில் பயிற்சியளிக்கப்பட்ட மூத்த தலைவர்களைக் கொண்டு நடத்தும் பல்வேறு முறைசாரா கல்வித் திட்டங்கள் மூலம் இது சாத்தியமாகும். மேலதிக விபரங்களுக்கு, www. colomboscouts. lk இணையத்தளத்துக்குள் பிரவேசிக்கவும்.

**தொடர்புகளுக்கு**

சுபுன் ஜயலத்,
உதவி மாவட்ட ஆணையாளர்
திரிசாரணர் & இளைஞர் அலுவல்
இலங்கை சாரணர் சங்கம் - கொழும்பு மாவட்டக் கிளை,
65/7, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02,
கைபேசி இல: 077 912 8090
மின்னஞ்சல் முகவரி: adc.rovers@colomboscouts.lk
இணையத்தளம்: www. colomboscouts.lk

4th Colombo Scout YOUTH FORUM 2022
Rekindling the Scout Spirit

# SLASSCOM இன் W-Tech Forum



SLASSCOM இன் W-Tech Forum ஆனது, ரோயல் நோர்வே தூதரகத்துடன் இணைந்து இலங்கையின் கிராமப்புறங்களில் பெண் தொழில்முனைவோரை உருவாக்குகிறது

முக்கிய வணிக மற்றும் தொழில்நுட்பக் கல்வியின் பற்றாக்குறையானது, இலங்கையின் கிராமபுற சிறு நிறுவனங்களின் ( SME Development) வளர்ச்சியில் ஒரு முக்கிய தடையாக உள்ளது என்பதை புரிந்துகொண்டு, SLASSCOM மகளிர் டெக்னோப்ரீனர்கள் மன்றம் (W-Tech Forum) ஆனது, நோர்வே தூதரகத்துடன் இணைந்து கொழும்பு மாவட்டத்துக்கு வெளியே பெண் தொழில்முனைவோரை மேம்படுத்துவதை மையமாகக் கொண்ட ஒரு திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமானது, பிராந்திய பெண் தொழில்நுட்ப தொழில்முனைவோர், திறமையான மற்றும் சாத்தியமான வணிகத் திட்டத்தை உருவாக்கல், நிதியை அணுகுவதற்கான திறனை மேம்படுத்துதல், அவர்களின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துதல், அவர்களிடம் காணப்படும் திறன்களைக் கொண்டு அவர்களின் வணிகத்தில் அடுத்த கட்டத்தை அடைய உதவுவதாகும்.

அத்துடன், டிஜிட்டல் தளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் ஒருவருக்கு ஒருவர் வழிகாட்டுதலுக்கான அணுகலைப் பெறுதல் ஆகியனவும் இந்தத் திட்டத்தின் நோக்கமாக உள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டமானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முன்னெடுக்கப்படுவதுடன், பங்கேற்பாளர்களுக்குள் வலையமைப்பை ஊக்குவிப்பதுடன், அறிவு, தகவல் மற்றும் நுண்ணறிவுகளைப் பகிர்வதற்கான தளத்தை உருவாக்கும்.

பல முக்கிய நிலைகளில் திட்டமிடப்பட்டு கட்டமைக்கப்பட்ட இந்தத் திட்டம், SLASSCOMன் கூட்டுப் பங்காளர்கள் மூலம் உள்ளூர் பெண் தொழில்முனைவோரின் கவனத்தை ஈர்ப்பதன் மூலம் தொடங்கும். அதன் இரண்டாவது கட்டத்தில், டபிள்யூ - டெக் (W-Tech) மன்றமானது தேர்ந்தெடுக்கப்பட்ட பிராந்திய சாம்பியன்களுடன் நாடு முழுவதும் உள்ள பெண் தொழில் முனைவோர்களை இணைக்க நடவடிக்கை எடுக்கும்.

தொடர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்த மும்மொழி சமூக ஊடகப் பிரச்சாரம் முன்னெடுக்கப்படுவதுடன், இந்த திட்டத்தின் பங்கேற்பாளர்களின் கூடுதல் மேம்பாட்டுத் தேவைகள் அடையாளம் காணப்படும். அடுத்தக் கட்டமாக வழிகாட்டல் திட்டம் மற்றும் பங்கேற்பாளர்களின் திறன்களை வளர்ப்பதற்கான தொடர் நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்படும். இதற்கு இணையாக, அவர்களின் வணிகத்தின் டிஜிட்டல் மயமாக்கல் பற்றிய நுண்ணறிவு மற்றும் முதலீட்டாளர்களுடன் இணைவது மற்றும் ஒத்துழைப்பது பற்றிய விழிப்புணர்வு அவர்களுக்கு வழங்கப்படும்.

> **“ தொழில்துறையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கும் அதே வேளையில், கலாசார நடைமுறைகளுக்கு சவால் விடுவதற்கும், தனிநபர்களுக்கு சம வாய்ப்புகளை வழங்குவதற்கும், பாகுபாடு மற்றும் அறியாமை இல்லாத பணி கலாசாரத்தை மேம்படுத்துவதற்கும் ஆதரவு வழங்குகிறது**

அதன் இறுதி கட்டத்தில், திட்டம் அதன் பங்கேற்பாளர்களுக்கு அவர்களின் வணிகத்தை வளர்ப்பதற்கான வலையமைப்பு வாய்ப்புகளை வழங்கும். பங்கேற்பாளர்களின் முன்னேற்றம், செயல்முறையை கற்றுக்கொள்வதற்கும் மேம்படுத்துவதற்கும் மதிப்பிடப்படும், இதனால் அடுத்த ஆண்டும் திட்டத்தைப் பிரதிபலிக்க முடியும்.

திட்டத்தின் முன்னேற்றம் குறித்து பேசிய SLASSCOM மகளிர் டெக்னோப்ரீனர்கள் மன்றத்தின் தலைவர் டாக்டர். ஹர்ஷனி பெரேரா, கொழும்புக்கு வெளியே உள்ள பகுதிகளில் SLASSCOM பெற்றுள்ள பல வெற்றிகளை மேற்கோள் காட்டி, W-Tech மன்றத்தின் பரவலை நாட்டின் கிராமப்புற மற்றும் நகரமயமாக்கப்படாத பகுதிகளுக்கு கொண்டு முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டார் .

இந்த திட்டத்தை வழிநடத்தும், கனெக்டர்ஸ் நெட்டின் நிருபா புஷ்பராஜா மற்றும் எம்ஐடியைச் சேர்ந்த பூர்ணிகா விக்கிரமசூரிய ஆகியோர் கூறுகையில்: "இந்தத் திட்டத்தைத் தொடங்குவதில் நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம், மேலும் மன்றத்தின் உதவியுடன் இதை முன்னெடுப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இது முதலாவது ஆண்டுதான். எதிர்காலத்தில் இன்னும் நிறைய விடயங்கள் வரவுள்ளன" என்றனர்.

"இலங்கையின் இந்த வணிகப் புரட்சியை வழிநடத்த பெண்களின் தலைமுறையை ஊக்குவிப்போம் என்று நாங்கள் நம்புகிறோம், மேலும் அவர்களுக்கு வழிகாட்டவும் உதவவும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்" என்று 99x இன் மன்ற வாரியத்தின் பிரதிநிதி ஷெஹானி செனவிரத்ன கூறினார்.

இலங்கை மென்பொருள் சேவை நிறுவனங்களின் சங்கம் (SLASSCOM) உள்ளூர் IT/BPM துறையில் அண்மைக்காலமாக அபரிமிதமான வளர்ச்சிக்கு ஒரு ஊக்கியாகச் செயல்பட்டது, அவற்றின் பல மன்றங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பல ஒருங்கிணைந்த முயற்சிகள், ஒவ்வொன்றும் தொழில்துறையின் ஒரு குறிப்பிட்ட அம்சம் மற்றும் தேவைகளுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொள்கின்றன.

புதுப்பித்த கல்வித் திட்டங்கள், தொழில்முறை மேம்பாட்டுத் திட்டங்கள், திறமை ஆதாரம், வேலை வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் தேவையான உள்கட்டமைப்பு மற்றும் கொள்கை தொடர்பான வளர்ச்சி நடவடிக்கைகள் வரை, SLASSCOM தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளுக்காக தேசிய ரீதியில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. 2025 ஆம் ஆண்டளவில் இலங்கைக்கு #1 ஏற்றுமதி வருமானம் ஈட்டக்கூடிய சாத்தியக்கூறுடன், இலங்கையின் எதிர்கால தொழில்துறையின் இயக்கியாக அவர்கள் தங்களை நிலைநிறுத்திக் கொண்டுள்ளனர்.

SLASSCOM ஆனது உள்ளூர்ப் பொருளாதாரத்துக்கு அதிகரித்த வணிக ஆதாயங்களைக் கொண்டு வருவதற்குத் தொழில்துறையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கும் அதே வேளையில், நிறுவனம் பாரம்பரிய பெருநிறுவன மற்றும் கலாசார நடைமுறைகளுக்கு சவால் விடுவதற்கும், தனிநபர்களுக்கு சம வாய்ப்புகளை வழங்குவதற்கும், பாகுபாடு மற்றும் அறியாமை இல்லாத பணி கலாசாரத்தை மேம்படுத்துவதற்கும் ஆதரவு வழங்குகிறது.

பெண்கள் டெக்னோப்ரீனர்கள் மன்றம் (W-Tech Forum) இலங்கையின் தொழில்நுட்ப சூழல் அமைப்பு முழுவதும் நேர்மறையான மாற்றத்தை உருவாக்குவதற்கும், பெரும்பான்மை அல்லது சமமான பங்குதாரர்கள் அல்லது CxO மட்டத்தில் பெண்கள் தொழில்நுட்ப முனைவோர், தொடக்கங்கள் மற்றும் வணிகங்களை ஆதரிக்கவும், ஊக்குவிக்கவும் மற்றும் வளர்க்கவும் தொடங்கப்பட்டது. இலங்கைக்கு கூடுதல் ஏற்றுமதி வருவாயை ஈட்டக்கூடிய சாத்தியக்கூறுகளுடன் பெண்களின் மேம்பாட்டை மேம்படுத்துவதற்கும் அவர்களை வளர்ப்பதற்கும் உத்தேசித்துள்ளது.

பொருத்தமான வணிக மற்றும் தொழில்நுட்பக் கல்வியை பெற்றுக்கொள்வது இலங்கையின் கிராமப்புறங்களில் எதிர்கொள்ளும் ஒரு முக்கிய தடையாக உள்ளது. நாட்டின் கலாசாரப் போக்குகள் பெண்களை வணிகத்தைத் தொடர்வதிலிருந்தும் தொழில்நுட்பத்தைத் தழுவுவதிலிருந்தும் பின்வாங்கியுள்ளன. W-Tech மன்றம் இந்த பிரச்சினைகளுக்கு சவால் விடுவதுடன், வெற்றியை அதிகரித்து வருகிறது, இலங்கை பொருளாதார வளர்ச்சி பயணத்தை மிகவும் வளமான மற்றும் சமமானதாக மாற்றுகிறது.



# வேப்பமரம் போய் அரசமரம் வந்தது

## திட்டமிட்ட பௌத்தமயமாக்கலின் ஓர் அங்கம்

சண்முகம் தவசீலன்

வடக்கு, கிழக்கு இணைப்பு என்பதை தடுக்கும் வகையில் மாறிமாறி வரும் அரசாங்கங்கள் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

அந்தவகையில் வடக்கு, கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் எனும் கோட்பாட்டை சிதைக்கும் வகையில், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, வனஜீவராசிகள் திணைக்களம், வனவள திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், கனிய மணல் திணைக்களம் உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்கள், முப்படையினரின் ஒத்துழைப்புடன் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

குறிப்பாக, வடக்கையும் கிழக்கையும் இணைக்கின்ற பகுதியில் குறித்த திணைக்களங்களைப் பயன்படுத்தி, பௌத்த மத சின்னங்களையும் அடையாளங்களையும் உருவாக்கி, இங்கு பௌத்த மக்களை குடியேற்றி, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டுக்கும் இடையே சிங்கள மக்களைக் குடியேற்றி, தமிழ் மக்களது தொடர்பைத் துண்டிப்பதே இந்த அனைத்துத் திணைக்களங்களின் நோக்கமாக இருக்கின்றது.

அந்தவகையில், தமிழர் தாயகக் கோட்பாட்டை சிதைக்க, திரைமறைவில் இராணுவத்தினரைப் பயன்படுத்தி, பௌத்த மதத்தைத் பின்பற்றுவோர் எவரும் வாழாத இடங்களில் பௌத்த சின்னங்களையும் புத்தர் சிலைகளையும் வைக்கும் நடவடிக்கைகள், மாறிமாறி ஆட்சிக்குவரும் எந்தவோர் அரசாங்கத்தாலும் முன்னெடுக்கப்படுகின்றது.

இதன் ஓர்அங்கமாக, மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த முல்லைத்தீவு - கொக்கிளாய் வீதியில், மணலாறு திரும்பும் சந்தியில், பௌத்த சின்னங்களை உருவாக்கும் முயற்சி, இராணுவத்தின் பாதுகாப்புக்கு மத்தியில் முன்னெடுக்கப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில், முல்லைத்தீவு, கொக்கிளாய் வீதியில், மணலாறு திரும்பும் சந்தியில் அதாவது, 13 ஆம் கட்டை சந்தி, கூகிள் வரைபடத்தில் 'கோம்பகஸ் சந்தி' என குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்களத்தில் 'கோம்பகஸ்' என்றால் வேப்பமரம் என்பதாகும். சந்தியின் நடுவில் சுற்றுவட்டத்தில் இருந்த வேப்பமரம் வெட்டி அகற்றப்பட்டு, அந்த இடத்தில் தற்போது அரச மரம் நாட்டப்பட்டுள்ளது.




இராணுவத்தின் பாதுகாப்பு வலயத்துக்குள் இருக்கும் இந்தப் பகுதியில் எவ்வாறு இது இடம்பெற்றுள்ளது எனக் கேள்வி எழுப்பும் மக்கள், இதுவும் திட்டமிட்ட பௌத்தமயமாக்கலின் ஓர் அங்கம் எனக் குற்றச்சாட்டை முன்வைக்கிறார்கள்.

இந்த இடத்தில், வேம்பு மரம் இருந்ததற்கு ஆதாரமாக 2016 ஆம் ஆண்டு Google Street view புகைப்படம் இருப்பதோடு, அவர்களே அந்த இடத்தை வேப்பமரசந்தி என அழைக்கின்ற நிலையில், எதிர் காலத்தில் அவ்விடத்தில் புத்தர் சிலை ஒன்றை நிறுவுவதற்கான ஏற்பாடாகவே, இந்த வேம்பு மரம் வெட்டப்பட்டு, அரசமரம் நட்டு பராமரிக்கப்படுகிறது எனவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

வேப்பமரச் சந்தியைச் சூழவுள்ள பகுதிகளில் மூன்று பாரிய படை முகாம்கள், கடந்த 10 வருடத்துக்கு மேலாக அமைக்கப்பட்டு, அவர்களாலும் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு உள்ளதாகவும் அவர்களின் ஆதரவுடனேயே இந்தச் செயற்பாடு இடம்பெற்றுள்ளதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தமிழர்களின் வாழ்விடங்களும் அவர்களின் மதம், கலாசாரம், வாழ்வியல் போன்ற தனித்துவ அடையாளங்களும் படிப்படியாக அழிக்கப்பட்டு வருகின்றன என்பதற்கு, வேப்பமரச் சந்தியில் நின்றிருந்த வேப்பமரம் அகற்றப்பட்டு, அரசமரம் நாட்டப்பட்டமையானது சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.






### மட்டு. மத்தி கல்வி வலயத்தில் புதிய பாடசாலை:

# கல்வி ஒன்றே கை கொடுக்கும்

## பாடசாலை ஒன்றைத் திறப்பது, சிறைச்சாலை ஒன்றை மூடுவதற்குச் சமம்

ஏ.எச்.ஏ. ஹுஸைன்
husseinmedia000@gmail.com



'பாடசாலை ஒன்றைத் திறப்பது, சிறைச்சாலை ஒன்றை மூடுவதற்குச் சமம்' என்று பொருள்பட சான்றோர்கள் சிலாகித்துச் சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கின்றோம். அதில் அர்த்தம் உள்ளது. ஏனெனில், மனித சமுதாயத்தை, சிறந்த செல்நெறியோடு வழிநடத்திச் செல்வதற்கு கல்வி முக்கியம். அந்த வாய்ப்புகள் கிடைக்கவில்லையெனில் மனித சமுதாயம் தட்டழிந்து போய் விடும்.

மனித மூலதனத்தில் முதலீடு செய்வது என்பது, சிறந்த தரம் மிக்க கல்விக்கான அணுகலை வழங்குதல் என்பதாகும். அதனாலேயே முதலீடுகளில் எல்லாம் சிறந்தது, கல்விக்கான முதலீடேயாகும் என்று துறைசார்ந்தோர் வலியுறுத்துகின்றனர்.

கடந்த 30 வருட ஆயுத மோதல்களால் சீர்குலைக்கப்பட்ட சமூகங்களின் வாழ்க்கையை, இயல்பாக மேம்படுத்துவதற்கு கல்வி ஒன்றே கை கொடுக்கும். ஏனெனில், கல்வி இயற்கை, செயற்கை இடர்களால் அழிந்து போவதில்லை. மனித நாச வேலைகளில் கல்வி பாதிப்பை எதிர்கொள்ளாது.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள், 1985, 1990 களில் ஏற்படுத்தப்பட்ட இன வன்முறைகளின்போதும் தொடர்ந்து இடம்பெற்று வந்த யுத்தத்தின்போதும், தமது உயிர் உடமைகள், வாழ்வாதாரம் தொழிற்றுறைகள், வாழ்விடங்கள் என்பனவற்றை இழந்து, மிக மோசமாகப் பாதிக்கப்பட்டார்கள்.

அந்தவேளையில் அவர்களுக்கு கைகொடுக்க எதுவும் இருந்திருக்கவில்லை. அவர்களது ஒட்டுமொத்த வாழ்வாதாரமும் விவசாயம், மீன்பிடி, வர்த்தகம் இன்னும் சில கைத்தொழில்கள் என்பனவற்றை முற்றுமுழுவதுமாக நம்பியே இருந்தது. அவை, கலவரங்களின்போது வாழ்வாதாரத்துக்கு கைகொடுக்கவில்லை. ஈடு செய்ய முடியாத இழப்புகளை எதிர்கொண்ட மக்கள், பின்னாள்களில் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கத் தொடங்கினார்கள்.


அதனடிப்படையில், 2007ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதே மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம். அந்தக் கல்வி வலயம் ஆரம்பிக்கப்பட்டு, சுமார் நான்கு ஆண்டுகள் கடக்கும்போது, அது இலங்கையிலேயே கல்வி அடைவு மட்டத்தில் முதல் நிலைக்கு வந்தது. க.பொ.த சாதாரண தரத்தில் 2011, 2012, 2013 ஆகிய மூன்றாண்டுகளும் தொடர்ந்து அகில இலங்கை ரீதியில் முன்னிலை வகித்தது.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் கல்வி வலயம், 76 பாடசாலைகளைக் கொண்டு, 1,885 ஆசிரியர்களோடும் 40 ஆயிரம் மாணவர்களுக்கும் தற்போது கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில், மேலும் ஒரு கல்விக்கான முதலீடாக 2022ஆம் ஆண்டில் புதிய பாடசாலை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஓட்டமாவடி அறபா நகர் கிராமத்தில் இந்தப் புதிய பாடசாலை அமைக்கப்படவுள்ளது.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சு, இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. இது மட்டக்களப்பு மத்தி கல்வி வலய, ஓட்டமாவடி கல்விக் கோட்டத்தில் 27ஆவது பாடசாலையாக அமையப் பெறவுள்ளது. இதனோடு மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் மொத்தப் பாடசாலைகள் 77 ஆக இருக்கும்.

மட்டக்களப்பு மாவட்டம், கல்குடா தேர்தல் தொகுதியின் முதலாவது முஸ்லிம் சமூக நாடாளுமன்ற உறுப்பினராகவும் பிரதியமைச்சராகவுமிருந்த மர்ஹூம் முஹைதீன் அப்துல் காதரின் பெயரைத் தாங்கிய வண்ணம், இந்தப் புதிய வித்தியாலயம் இயங்கவுள்ளது.


Ministry of Education, Information Technology Education, Pre School Education Sports, Cultural Affairs, Youth Affairs, Rehabilitation & Resettlement
Eastern Province
Trincomalee
2022.02.15

இப்பாடசாலையை ஆரம்பிப்பதற்கான சகல முயற்சிகளையும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட் மேற்கொண்டிருந்தார் என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ. திஸாநாயக்க, 2022.02.15 திகதியிட்டு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள அனுமதிக் கடிதத்தில், கிழக்கு மாகாண கல்வித் திணைக்களக் கட்டமைப்புக் குழுவின் தீர்மானத்தைக் கருத்தில் கொண்டு, புதிய பாடசாலையைத் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு புதிய ஆளணி வளம் அங்கிகரிக்கப்படும்வரை, வலயக் கல்விப் பணிப்பாளர் உறுதிப்படுத்தியற்கமைய அதிபர், ஆசிரியர்கள் வழங்க வேண்டும் என்றும் அதில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த கால போரால் பாதிக்கப்பட்டு, மீளக் குடியமர்ந்துள்ள அறபா நகர் கிராம மக்களின் எதிர்கால இளந் தலைமுறையினருக்கு, இந்தப் புதிய பாடசாலை ஒரு வரப்பிரசாதமாக அமையும் என ஓட்டமாவடி கோட்டக் கல்வி அதிகாரி வெள்ளத்தம்பி அஜ்மீர் தெரிவித்தார்.

இதுபோன்று, வெகு சிரமத்தின் மத்தியில் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்க வேண்டியுள்ள ஓட்டமாவடி கல்விக் கோட்டத்தின் கீழ் வரும் பொத்தானை, சூடுபத்தினசேனை, கொண்டையன்கேணி, கள்ளிச்சை, பதுறியா நகர் போன்ற கிராமங்களிலும் புதிய பாடசாலைகள் திறந்தால் இளம் சிறார்களின் கல்வி மேம்பாடடையும் என பிரதேச ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேமாதிரியாக, எறாவூர் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட ஸக்காத் கிராமத்தில்; ஒரு புதிய பாடசாலையும் காத்தான்குடி கோட்டப் பிரிவில் சுமார் ஆறு பாடசாலைகளையாவது புதிதாக உருவாக்க வேண்டும் என்று ஆர்வலர்கள் முன்மொழிந்துள்ளனர். குறைந்தபட்சம், புதிய காத்தான்குடிப் பிரதேசத்தில் இரண்டு பாடசாலைகளையாவது புதிதாகத் திறந்தால், அந்தப் பிரதேச மாணவர்கள் நன்மையடைவார்கள் என்று பிரதேச ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

இனியும் இழப்பதற்கு எதுவுமில்லை என்று ஏங்கித் தவிக்கின்ற சிறுபான்மையினருக்கு, கல்விதான் கரை சேர்க்கும் என்று எல்லோரும் நம்புகின்றோம்.

இனத்தால், மதத்தால், மொழியால் பிளவுபட்டுப்போன நம் தேசத்தை, மீள இணைக்க இன மத மொழி பேதங்களுக்கப்பால் இந்தக் கல்வி ஒன்றுதான் கைகொடுக்கும் என்பதும் தெளிவான விடயம்.

சிறந்த கல்வியறிவின் மூலம்தான் நாம் வேறுபாடுகளைத் தகர்த்தெறிய முடியும்.

'நாம் இலங்கையர்' என்ற சிறப்பு அடையாளத்தைப் பெறுவதற்கு, ஒருங்கிணைப்பை, கூட்டுறவை, சகவாழ்வை எவ்விடத்தில் இழந்திருக்கின்றோம் என்பதைப் பார்க்க வேண்டும்.

மனப்பூர்வமாகக் கொண்டாடுவதற்கு ஏற்ற சூழ்நிலைகளை வளர்த்தெடுப்பதில் நாம் தவறியிருக்கிறோமா என்ற கவலை உள்ளது. இந்தக் குறைபாடுகளை கல்வியாலேயே சீர் செய்ய முடியும்.

நல்லிணக்கத்துக்கான உள்ளூர் சூழலையும் மனிதாபிமானத்தையும் புரிந்து கொள்ள முடியாத ஒரு புதுவித கலாசாரத்துக்குள் நாம் இப்பொழுது வந்து நிற்கிறோம். அப்படிப்பட்டதொரு மனப்பாங்கு ஆபத்தானது.

நமது பிள்ளைகளை இனம் சார்ந்து, சமயம் சார்ந்து, மொழி சார்ந்து கல்வி கற்பிக்கும் சூழல், நடைமுறைதான் தற்போதைக்கு உள்ளது. இவற்றையெல்லாம் நாம் மாற்றியமைக்க வேண்டும். இன அடையாளங்களையும் எல்லைகளையும் கடக்க வேண்டும்.

பாலர் வகுப்பு முதற்கொண்டு 13 ஆண்டுகள் வரை மாணவர்களை இனவாத, மதவாத, மொழிவாத அடிப்படையிலான பாடசாலைகளில் கற்கச் செய்து விட்டு, எந்தவிதமான ஆயத்தப்படுத்தல்களும் இல்லாமல் சம்பந்தப்பட்ட மாணவனோ, மாணவியோ பாடசாலையை விட்டு வெளியேறியதும் 14ஆம் வருடம் முதல் திடீரென "இன ஒற்றுமையாக இருந்துகொள்" என்று கூறுவதும் சகவாழ்வைப் பற்றிப் போதிப்பதும் பொருத்தமில்லாத ஒன்று.

ஏனைய மதத்தைச் சேர்ந்தவர்களை அயலவராகக் கொண்டிருப்தில் நாம் பெருமையடைகின்றோமா, வெறுப்படைகின்றோமா?

நமது சுக துக்கங்களிலும் பங்கெடுக்க ஏனைய சமூகத்தவர்களுக்கு இடமளிக்கின்றோமா?

நமது வளர்ச்சியிலும் ஆக்கபூர்வச் செயற்பாடுகளிலும் பங்கெடுக்க நாம் அடுத்த சமூகத்தாரை அனுமதிக்கின்றோமா என்பதையும் சிந்தித்துணர்ந்து பார்க்க வேண்டும்; சிந்திப்போம் செயற்படுவோம்.

உங்களுக்கான வாழ்க்கையை

# நீங்களே வாழவேண்டும்

## பரத நடன ஆசிரியை சிகிவாகினி லிங்கநாதன் கூறுகிறார்



முருகேசுபிள்ளை செல்வராஜா

“பல்கலைக்கழகம் சென்ற ஒரு சிலர், நுண்கலைகளில் பட்டங்களைப் பெற்று தொடர்பில்லாத வகையில் வெவ்வேறு தொழில் துறைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். அத்துடன் குறிப்பிட்ட சிலர் இத்தெய்வீகப் பரதக்கலை விடயமாக, பண வருவாயை எதிர்பார்த்து கற்றும் கற்பித்தும் வருகின்றனர். இச் செயற்பாடுகள் முறையற்றவையாகும். உண்மையிலேயே கலையின் மீது ஆர்வமிருப்பவர்கள், அதனை இலக்காகக் கொண்டு பயிலவும் பயிற்றுவிக்கவும் வேண்டும். அதேவேளை புனிதத் தன்மையுடன் முன்னெடுக்கவும் வேண்டும்” என சிகிவாகினி லிங்கநாதன் தெரிவித்தார்.

இறக்குவானை பரி. யோவான் தமிழ் தேசிய கல்லூரியின் பரத நடன ஆசிரியையாகவும் அபிநய கலாகேந்திர நாட்டியபள்ளி இயக்குநருமாகக் கலைச்சேவை செய்யும் ‘பரதநாட்டிய கலாவித்தகர்’, ‘நுண்கலைமாணி’ செல்வி சிகிவாகினி லிங்கநாதனுடனான நேர்காணலை கேள்வி- பதில் வடிவில் தருகின்றோம்.

**கேள்வி: தங்களின் நடனக்கலை ஈடுபாடு குறித்து விளக்குவீர்களா?**

பதில்: இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள இறக்குவானையை பிறப்பிடமாக கொண்டவள் நான். தந்தை லிங்கநாதன், இந்து மத போதகராகவும் தாயார் மல்லிகா இல்லத்தரசியாகவும் இருக்கிறார்கள். எனக்கு இரு சகோதரர்கள்; மூத்தவர் தர்மராஜ் லிங்கநாதன். இளையவர் ரஜீவ் லிங்கநாதன். இருவருமே திருமணம் முடித்து, மனைவி குழந்தைகளுடன் ஊரிலேயே இருக்கிறார்கள்.

எனது பெற்றோர், கலையின் மேல் காட்டிய ஆர்வம் என்னை பரதநாட்டியத் துறையில் கால்பதிக்க வைத்தது. எமது ஊரில், கலை சார் பயிற்சிக்கு அடிப்படை வசதிகள் இருக்கவில்லை. ஆகவே , பரதநாட்டியத்தை கற்க ஊர் விட்டு ஊர் செல்ல வேண்டி இருந்தது.

ஆரம்பகால பயிற்சிகளை, பலாங்கொடை திருமதி லலிதாம்பிகை சண்முகநாதனிம் கற்றுக்கொண்டேன். ஒரு குருவை பின்பற்றி, அவரிடமே முழுகலையையும் கற்கும் வாய்ப்பு எனக்கு அமையவில்லை. ஆரம்பக் கல்வியை பரியோவான் தேசிய பாடசாலையில் கற்றேன். உயர்தரத்தில் நடன பாடத்தைத் தெரிவு செய்து கற்க, ஆசிரியர் இல்லாததால் கொழும்பு, பம்பலபிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் உயர்தரத்தை கற்றேன்.

வட இலங்கை சங்கீத சபையின் கீழ் நடக்கும் நடன பரீட்சைகளுக்கு உயர்தரத்துக்குச் சென்ற பின்னரே தோற்றுவதற்கு வாய்ப்புக் கிட்டியது. இன்று நாட்டிய துறையில் நானிருக்கும் நிலைக்கு வர முக்கிய காரணமாக இருந்தவர், எனக்கு உயர்தரத்தில் நடன பாடத்தை கற்பித்த ஆசிரியை முதுகலைமாணி திருமதி துவாரகா ஜெய்ஷங்கர்.

உயர்தரத்தில் சிறந்த சித்தியை பெற்றதால், பரதநாட்டியத்தில் நுண்கலைமாணி பட்டம் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் பட்டப்படிப்பு கல்வியை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தொடர்ந்தேன். நான்கு வருடப் பட்டபடிப்பை முடித்த, நிலையில், நான் கல்வி கற்ற பாடசாலையான பரி யோவான் தேசிய பாடசாலையிலே நடன ஆசிரியைக்கான நியமனம் கிடைக்க பெற்றது. நியமனம் பெற்று ஒரு வருடம் ஆகியுள்ள நிலையில், ‘அபிநய கலாகேந்திர நாட்டிய பள்ளி’ எனும் நிறுவனத்தையும் நடத்தி வருகிறேன்.

**கேள்வி: உங்களின் கலை சார் குடும்பப் பின்னணி எவ்வகையானது?**

பதில்: கலைத் தொடர்பான குடும்ப பின்னணி பற்றி கூறுமிடத்து, தந்தை இந்து மத போதகர்; அதையும் தாண்டி சிறந்த ஓவியர். அம்மா இல்லத்தரசியாக இருந்தாலும், பாடசாலை காலத்தில் நாடகம், விளையாட்டுப் போட்டிகளில் தேசிய மட்டம் வரை சென்று சாதித்தவர். மூத்த சகோதரரான தர்ஷன் தர்மராஜ், சிங்கள, தமிழ் திரைப்பட உலகில் புகழ் பூத்த நடிகர். இளைய சகோதரரும் ஓவியத்துறையிலும், கைவினை அலங்காரத் தொழிலிலும் கைதேர்ந்தவர்.

**கேள்வி: உங்களின் எதிர்கால இலக்கு தொடர்பாக கூறுவீர்களா?**

பதில்: பாடசாலை காலத்தில் இருந்தே நாட்டியத்தில் சாதிக்க வேண்டும் என்ற குறிக்கோள் இருந்து வந்தது. ஆனால், ஆரம்பத்தில் இருந்தே இதற்கான சரியான களம் அமையவில்லை. பாடசாலை தமிழ் தின போட்டிகளில் எல்லா பிரிவுகளிலுமே பங்குபற்றியுள்ளேன். ஆனால், சரியான நடன ஆசிரிய வழிகாட்டி இருக்கவில்லை. தாயோடு வேறு ஊர்களுக்கு சென்று அங்கு நாட்டியம் கற்பிக்கும் ஆசிரியர்களிடம் போட்டிக்கான விடயங்களை கற்று பங்குபற்றுவேன். ஆகவே, என்னால் உருவாகின்ற சமுதாயத்தினருக்கு இந்த நிலை வரக்கூடாதென்ற எண்ணம் எனக்கு எப்போதும் உண்டு. நான் கற்ற கலையை, என்னால் முடிந்த வரை என் மாணவிகளுக்கு கற்பித்து, அவர்களை என்னை விடவும் நாட்டிய கலையில் உயர்ந்த மட்டத்தை அடைய வேண்டி பாடுபடுவேன். அதையும் தாண்டி எனது ஊரில் பரதநாட்டிய கலைக்கொரு சிறந்த அந்தஸ்தை உருவாக்கி நல்ல பரம்பரையை உருவாக்க வேண்டும் என்பது எனது உறுதியான இலக்காகும்.

**கேள்வி: பரதக்கலை கற்பதன் தேவை என்னவென்று கருதுகின்றீர்கள்?**

பதில்: பரதக்கலை என்று மட்டுமில்லை. எந்தத் துறையானாலும் அந்தத் துறையைத் தெரிவு செய்து அதில் ஆர்வம் காட்டி, அத்துறையில் சாதிக்க எண்ண வேண்டும். பரதக் கலையை பிரதானப்படுத்தி சொல்ல வேண்டுமானால், வாழ்க்கையை நெறிப்படுத்தும் ஒரு கலையாகும். பரதநாட்டிய கலையில், தனியே நடனத்தின் தொன்மையை பற்றி மட்டும் பறைசாற்றாமல் விஞ்ஞானம், கணிதம், இலக்கியம், தமிழ், வரலாறு, நாடகம், இசை, சமயம் என்று அனைத்து பாடங்களினதும் செல்வாக்கு இங்கு மேலோங்கியுள்ளது. பரதகலையானது தன்னகத்தே மருத்துவ அம்சங்களையும் கொண்டுள்ளது. உடல் ரீதியான பிரச்சினைகள் எதுவாயிருந்தாலும் உடற்பயிற்சி மூலமாகவும் யோகாசனம் மூலமாகவும் நிவர்த்தி ஆகும் பேற்றை நாட்டியம் கொண்டுள்ளது.

**கேள்வி: பரத நடன ஆசிரியை என்ற ரீதியில், இன்றைய இளம் பெண்களுக்கு தாங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?**

பதில்: எந்தத் துறையைப் பார்த்தாலும் அதில் கட்டாயம் ஒரு பெண் சாதித்துக் கொண்டே இருக்கிறாள். ஆனால் சமூகம், இன்னுமே பெண்களை மட்டம் தட்டிபார்த்து கொண்டேயிருக்கிறது. பெண்களுக்கென்று விதிகளை போட்டு, சட்டங்களை அமைத்து அதன் மூலமான கண்ணோட்டதிலே பார்க்கிறார்கள். ஒரு சில பெண்களும் இந்தச் சட்டங்களுக்கு கீழ் பணிந்து, தங்களின் விருப்பங்களை முடக்கிக் கொள்கிறார்கள். நீங்கள் ஒரு விருப்பமான துறையை தெரிவு செய்தால் அதில் ஏதேனும் சாதிக்கவேண்டும் என்று நம்பிக்கை கொள்ளுங்கள். கல்வி கற்கும் காலத்திலேயே ‘நான் இதுவாகதான் வரவேண்டும்’ என்று ஓர் இலட்சியத்தை மனதிலே விதையுங்கள். அந்த இலட்சியத்தை நோக்கி பயணியுங்கள். சமூகம் என்ன சொல்லும் என்பதை யோசிக்காதீர்கள். உங்களுக்கான வாழ்க்கையை உங்களைத் தவிர இங்கு யாரும் வாழ்ந்துவிடபோவதில்லை. உங்களுக்குள் சட்டங்களைப் போட்டு, ஒரு வட்டத்துக்குள் வாழாமல் சமூகத்தில் உங்களை அடையாளப்படுத்திக் கொள்ளுங்கள்.

**கேள்வி: அபிநய கலாகேந்திர நாட்டிய பள்ளியை உருவாக்குவதற்கான நோக்கம் யாது?**

பதில்: இந்த நிறுவனமானது பரதநாட்டியத் துறையில் ஆர்வமுள்ள இளம் கலைஞர்களை சமுதாயத்தில் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஐந்து வயது முதல் நிறைய மாணவர்கள் கற்று வருகிறார்கள். இவர்கள், சிறுவயது முதலே கலையில் கொண்டிருக்கும் பக்தியும் ஆர்வமும் என்ன வியக்கவைக்கின்றது. அவர்களின் பெற்றோரும் அவர்களுக்கு சரியான வழிகாட்டியாக இருக்கிறார்கள்.

கலைத்துறையை பொறுத்தவரையில், கற்பிப்பதை தாண்டி கலை நிகழ்வுகளை ஆற்றுகை செய்து அனுபவங்களைப் பெறுவது சாலச் சிறந்தது. ஒரு கலைஞனுக்கு ஆகச்சிறந்த பாராட்டு அக்கலை நிகழ்வுகளைப் பார்த்து ரசிகர்கள் மூலமாக பெற்றுக்கொள்ளும் கைத்தட்டல்களும் பாராட்டுக்களுமேயாகும்.

நாட்டிய நாடகங்கள் செய்யும்பொழுது, நேர்மறை கதாபாத்திரமாக இருந்தாலும் எதிர்மறை கதாபாத்திரங்களாக இருந்தாலும், அந்தக் கதாபாத்திரமாக மாறியே அதனை ஆற்றுகை செய்ய எத்தனிக்க வேண்டும். அவ்வாறு இந்திய சுதந்திரப் போராட்டம் என்ற நாட்டிய நாடகத்தில், ஆங்கிலேயர் வேடமிட்டு நடிக்கும் பொழுது ரசிகர்களில் இருவர் என்னைச் சந்தித்து, சரமாரியாகத் திட்டினார்கள். காரணம், என்னை வந்து சந்தித்தவர்கள் இந்திய சுதந்திர போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள். அவர்கள் அதை ஓர் ஆற்றுகை நிகழ்வாகப் பார்ப்பதை மறந்து, உண்மையிலேயே இது ஏதோ நேரில் பார்ப்பது போல் இருக்கின்றது எனக் கூறினார்கள். ஆனால், அந்த விமர்சனம் எனக்கு உண்மையிலேயே சிறந்த ஒரு மன நிறைவையும் மன மகிழ்ச்சியையும்



மாணவிகள்



ஆசிரியை மாணவிகளுடன்



மக்களுக்கு உதவுவதற்காகவே

# இறைவன் என்னைப் படைத்தான்

## ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேசஅழகி இவஞ்சலின் லட்சுமணர்



வி.ரி. சகாதேவராஜா

“இலங்கைக்கு முதல் தடவையாக விஜயம் செய்துள்ளேன். இலங்கை இயற்கை எழில்மிகுந்த வளமான நாடு. கனிவான மக்கள். நல்ல விருந்தோம்பல் பண்பு. இலங்கையை எனக்கு நன்கு பிடித்துள்ளது. எனது பூர்வீகம் இலங்கைதான். அதுவும் நாவிதன்வெளி. எனது பாட்டனார் ராஜசிங்கம் அதிபராயிருந்து படிப்பித்த பாடசாலைக்கு இன்னும் உதவுவோம். மக்களுக்கும் நிறைய உதவுவோம்” இவ்வாறு கூறுகிறார் ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேசஅழகி (Miss International UJ -2020-2022)செல்வி இவஞ்சலின் லட்சுமணர் .

ஆசியாவிலிருந்து இந்த உயர்விருதுக்குத் தெரிவான முதல் பெண் இவஞ்சலின். 21 வயதேயான இவஞ்சலின், நடிப்பு மற்றும் தொலைக்காட்சி துறையில் கனடாவில் பட்டப்படிப்பை பூர்த்திசெய்தவர். லண்டனில் இவங்சலின் பெஷன் லிமிட்டட் (Evanjelin Fashion Ltd) நிறுவனத்தின் ஸ்தாபகராகவும் இயக்குநராகவும் இருக்கிறார். சிறந்த ஒரு பரோபகாரி. தமிழ் ஓரளவு தெரிகிறது. லண்டனில் பிறந்து வளர்ந்தவர். அழகியல்துறையில் சிறந்துவிளங்கும் இவர், டெனிஸ், கூடைப்பந்து, கிரிக்கெட், கால்பந்து, வலைப்பந்து போன்ற விளையாட்டுகளிலும் தலைமைத்துவத்தை வகித்து சாம்பியன் விருதுகளைப் பெற்றுள்ளார்.

2017-18 வருடத்திற்கான Miss Teen Great Britain CROWN விருதையும் பெற்றுள்ளார். 2016-17இல் Miss Junior Teen Great Britain CROWN 1st runnerup பெற்றார். லண்டன் பிஷப் சொலனரில் நடைபெற்ற 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கால்பந்தாட்டத்தில் மிட்லண்ட கப்பை வென்றெடுத்தவர். அதேவேளை, கிரிக்கட்ட சுற்றுப்போட்டியிலும் மிட்லண்ட கப் (Midland cup) பெற்றவர்.

எதிர்வரும் ஒக்டோபரில் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உலகஅழகி தெரிவுப்போட்டியில் கலந்துகொள்ளவிருக்கும் பிரித்தானிய உலகஅழகி இவஞ்சலினை, நாவிதன்வெளியில் சந்தித்து பேசினோம்.

நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) அவரால் நிறுவப்பட்ட 10அடி உயர சரஸ்வதி சிலையை, கடந்த ஞாயிற்றுக்கிழமை (20) நண்பகல் திறந்துவைத்தார்.

1970களில் நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்தில் அதிபராயிருந்த ராஜசிங்கத்தின் பேத்தியான இவர், பெரிய பிரித்தானியாவின் அழகுராணியாக மூன்று தடவைகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

முள்ளாள் அதிபர் ராஜசிங்கத்தின் மகன் ஜீவராஜூ சாந்தி ராஜகருணா தம்பதியினரின் மகளான உலகஅழகுராணி இவஞ்சலிலும் ராஜசிங்கத்தின் குடும்பத்தினரும் இப்பிராந்தியத்தில் வசதியில்லாத மக்களுக்கு வீடு கட்டிக்கொடுத்தல், பாடசாலைகளுக்கு உதவுதல் போன்ற சமூகசேவைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

அதன் ஓரங்கமாக அன்னமலை மகாவித்தியாலயத்தில் 10அடி உயர சரஸ்வதி சிலை நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது. செல்வி இவஞ்சலின் லட்சுமணர் இந்தத் திருவுருவத்தைத் திறந்துவைப்பதற்கென்றே இலங்கை வந்திருந்தார். அவருடன் அவரது தாயார் சாந்தி ராஜகருணாவும் வருகைதந்தனர். இலங்கை சுற்றுலாஅதிகாரசபை அவர்களுக்கான விருந்தினர் அங்கிகாரத்தை வழங்கியுள்ளதுடன் கூடவே அதன்பிரதிநிதிகளும் வந்திருந்தனர்.

அதிதிகள், பாண்ட் வாத்தியம் சகிதம், மாலைசூட்டி, பூச்செண்டு வழங்கி கோலாகலமாக வரவேற்கப்பட்டனர். பாடசாலை வளாகத்தில் நிறுவப்பட்ட சரஸ்வதித் தாயின் திருவுருவ திறப்புவிழா, வித்தியாலய அதிபர் சீ.பாலசிங்கன் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக, சரஸ்வதித்தாயின் திருவுருவத்தை இவஞ்சலின் திறந்துவைக்க, சிலைக்கான நினைவுபடிமக்கல்லை அவரது தாயார் சாந்திராஜகருணா திரைநீக்கம் செய்துவைத்தார். உலகஅழகி வருகைதந்து, அவர் நிர்மாணித்த சரஸ்வதி திருவுருவத்தைத் திறந்துவைத்தமைக்காக, உலகஅழகி இவஞ்சலின், அவரது தாயார் சாந்தி ஆகியோருக்கு



பாடசாலை சமூகம் பொன்னாடை போர்த்திக்கௌரவித்தது.

பின்னர், உலகஅழகி இவஞ்சலின் ‘வணக்கம் நன்றி’ எனும் வார்த்தைகளை தமிழில் பேசி உரையை ஆங்கிலத்தில் தொடர்ந்தார். சகோதார இனத்தைச் சேர்ந்த அவரது தாயார் சாந்திராஜகருணா, தமிழில் அழகாக உரையாற்றினார். பாடசாலைக்குத் தேவையான மேடை, ஒலிபெருக்கி வசதிகளையும் செய்துதருவதாக அவர் உறுதியளித்தார்.

விழாவில் உலகஅழகி இவஞ்சலின் பாட்டனார் முன்னாள் அதிபர் ராஜசிங்கத்துக்கு ஆத்மார்த்த அஞ்சலி செலுத்தப்பட்டது. அவரது குடும்ப உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

ஒக்டோபரில் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உலகஅழகி தெரிவுப்போட்டியில் கலந்துகொள்ளவிருக்கும் பிரித்தானிய உலகஅழகி இவஞ்சலின் வெற்றிபெறவேண்டி, இறை பிரார்த்தனை நிகழ்த்தப்பட்டது.

அதன்பின்னர், குடியிருப்புமுனையில் அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட வீடொன்றை வசதிகுறைந்த குடும்பமொன்றுக்கு வழங்கிவைத்து அதற்கான தளபாடங்களையும் வழங்கிவைத்தனர்.

**கேள்வி: நீங்கள் இலங்கைக்கு வருவது முதல் தடவையா? இலங்கை விஜயம் எப்படி அமைந்தது?**

பதில்: இதுதான் இலங்கைக்குவரும் முதல் பயணம். எனது அம்மா பிறந்த காலி தொடக்கம் எனது அப்பா பிறந்த நாவிதன்வெளி வரை, இரண்டரை வார காலபயணத்தில் சுகமான அனுபவம் பெற்றேன். நாளை யாழ்ப்பாணம் சென்று, மீண்டும் கொழும்பு செல்லவிருக்கிறேன். இலங்கை வளமான நாடு. நல்லமக்கள்; எங்கும் இன்முகத்தோடு வரவேற்கும் நல்ல உள்ளம்கொண்ட மக்கள்.

**கேள்வி: கண்டி தலதா மாளிகைக்கும் சென்றதாக அறிகிறோம்..**

பதில்: ஆம் அழகான வணக்கஸ்தலம். அங்கு பெருவரவேற்பும் அளித்தார்கள். கண்டியன் சாறி அணிந்து மகிழ்ந்தேன்.

**கேள்வி: நாவிதன்வெளியில் உங்களுக்கான வரவேற்பு எப்படி இருந்தது?**

பதில்: உச்சக்கட்ட மனம்பிடித்த வரவேற்பு. சரஸ்வதி சிலையை நானும் தாயாரும் திறந்துவைக்க கிடைத்தது ஒரு வரப்பிரசாதம். நல்ல விருந்தோம்பல். எனது பாட்டனார் ராஜசிங்கம் லட்சுமணர் அதிபராயிருந்து கற்பித்த நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்திற்கு என்ன உதவி தேவையென்றாலும் செய்வோம். அங்கு மேடை ஒலிபெருக்கி தேவையென்றார்கள். அதனைச்செய்ய சித்தமாயிருக்கிறோம்.மேலும் உதவிசெய்யக்காத்திருக்கிறோம்.

**கேள்வி: பாடசாலைக்கு முக்கியத்துவம் கொடுக்கக் காரணம் என்ன?**

பதில்: நான் உலக அழகியாயிருந்தாலும் எனக்கு கைகொடுத்தது கல்விதான். நான் பெஷன்டிசைன் நவீன வடிவமைப்பு பாடம்தான் படித்தேன். பின்பு கனடாவில் நடிப்பு மற்றும் தொலைக்காட்சி துறையில்







பட்டப்படிப்பை கடந்தவருடம் பூர்த்திசெய்தேன். அதனால் சிறந்த தொழில்வாய்ப்பு தேடிவருகிறது. எனினும் இறையருளால் இந்த அழகுத்துறையும் எனக்கு வாய்ப்பளித்துள்ளது.

**கேள்வி: தங்களுக்கு எத்தனை வயது? இது இக்கிய இராச்சியத்தில் அழகுராணியாக தெரிவானது முதல் தடவையா?**

பதில்: எனக்கு 21வயது. கடந்த 3தடவைகள் இந்தக் கிரீடத்தைசூடியுள்ளேன். 2020-21க்காக நான் இறுதியாக 56 போட்டியாளர்களுடன் போட்டியிட்டு முதல் ஆசியப் பெண்ணாகத் தெரிவானேன். அது சந்தோசமாகவிருக்கிறது. கொவிட்-19 காரணமாக இவ்வாண்டுக்கும் அதனை நீடித்துள்ளார்கள்.

**கேள்வி: இன்னமும் அழகுராணிபோட்டியில் கலந்துகொள்ளும் எண்ணம் இருக்கிறதா?**

பதில்: எதிர்வரும் ஒக்டோபரில் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உலகஅழகி தெரிவுப்போட்டியில் கலந்துகொள்ளவிருக்கிறேன்.

**கேள்வி: தங்கள் பொழுதுபோக்கு என்ன?**

பதில்:அழகுக்கலை, மற்றவர்களுக்கு உதவுதல், ஆடைவடிவமைப்பு, கலை, பயணம்.

**கேள்வி: நீங்கள் ஒரு சிறந்த பரோபகாரி என அறிகிறோம்? அந்த சிந்தனைபண்பு எப்படி வந்தது.?**

பதில். அந்தப்பண்பு எனது அம்மாவிடமிருந்துவந்தது. 2014இல் 60ஆயிரம் டொலர்களுக்கு மேல் நிதி சேகரிப்புசெய்து எண்ணற்ற தானதருமங்களைச் செய்தோம். Together for Short lives Christie Charity செயற்றிட்டங்களினூடாக மக்களுக்கு உதவியுள்ளோம். E.Francia Foundation ஐ ஆரம்பித்து சுயஉதவி செய்துவந்தேன்.

**கேள்சி : தங்கள் எதிர்கால இலட்சியம் என்ன?**

பதில்: இறைவன் என்னைப் படைத்தது மக்களுக்கு உதவி செய்வதற்காக! எனவே முடிந்தளவு சமூகசேவை செய்யக்காத்திருக்கிறேன்.

# English Festival Ceremony






மட்டக்களப்பு, மத்தி காத்தான்குடி ஸாவியா மகளிர் வித்தியாலய ஆங்கிலப் பாட ஆசிரியர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட *English Festival Ceremony* பாடசாலையின் அதிபர் எஸ்.எல். அப்துல் கபூரின் தலைமையில் பாடசாலை ஆராதனை மண்டபத்தில் வியாழக்கிழமை (24) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். எம். எம் .எஸ் உமர் மௌலானாவும் கௌரவ அதிதிகளாக ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.எம் மர்சூக், வரலாறு பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜீ.எம். ஹக்கீம், உடற்கல்வி பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எம். முதர்ரிஸ் ஆகியோரும் விசேட அதிதிகளாக காத்தான்குடி மீரா ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் மௌலவி எம்.ஐ ஆதம்லெப்பை பலாஹி, கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்.எஸ்.எம் ஸாபித்தும் கலந்து சிறப்பித்தார்கள்.

அத்துடன் *English Exhibition, English Activity Room, English Food Festival* என்பனவும் நிகழ்வின் மேலதிக சிறப்பம்சங்களாகும்.

–பாறுக் ஷிஹான்







# எங்களுக்கான பாதையை உருவாக்குதல்






விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் அமைப்பின் பங்குபற்றுதலுடன் 'எங்களுக்கான பாதையை உருவாக்குதல்; பெண்கள் குடும்பத் தலைவர்களுக்கான மாறிச் செல்லும் வரைவிலக்கணங்களை உருவாக்குதல்' என்னும் தொனிப்பொருளில் நடைபெற்ற ஆய்வின் வெளியீட்டு நிகழ்வு, யாழில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

விழுது அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மைத்திரேயி இராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில், சிறப்பு அதிதிகளாக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ரூபினி வரதலிங்கம், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவர் சுரேந்திரகுமார், யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி சுதாகர் ஆகியோர் கலந்துகொண்டனர். மேலும் இந்நிகழ்வில், பனை அபிவிருத்தி சபையின் அதிகாரிகள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டகளை சேர்ந்த அரச அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

–நிதர்சன் வினோத்




# சாய்ந்தமருதில் நூல் வெளியீட்டு விழா

கல்முனை அநுசரி பதிப்பகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரபல எழுத்தாளர் கதீர் எழுதிய 'காக்கை நிறச் சேலை' எனும் சிறுகதை நூல் வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை (27) காலை 09 மணிக்கு, சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வைத்திய அத்தியட்சகர் அஸாத் எம் ஹனீபா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரபல எழுத்தாளர்களான கே.எல். நப்லா, டனிஸ்கரன், சிறாஜ் மஸ்ஹூர், றியாஸ் குரானா, ஏ.எம்.சாஜித் அஹமட், மு.மு.மு. பாசில், நபீல் ஆகியோர் உரைகளை ஆற்றவுள்ளனர். கவிஞர் மருதமுனை விஜிலியின் அரங்கழைப்பில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

–அ. அஸ்வர்

# காதலின் ஆறுவகைநிலை

ஜேர்மன் தமிழ்வான்அலை நடத்தும் 'காதலின் ஆறு வகை நிலை' எனும் தலைப்பில், இணையவழி பன்னாட்டு இலக்கியச் சந்திப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை (27) இலங்கை, இந்திய நேரப்படி மாலை 7.30 மணிக்கு நடைபெறும்.

'காதலின் ஆறு வகை நிலை' இலக்கியச் சந்திப்பில் இந்தியா, இலங்கை, இங்கிலாந்து , பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆறு கவிஞர்கள் பங்குபற்றுகின்றனர். இலங்கை சார்பில் மட்டக்களப்பு, பெரியநீலாவணையைச் சேர்ந்த கவிஞர் நீலாவணை இந்திரா பங்குபற்றுகிறார். நிகழ்வில், அமீரகம் தேஜஸ்வினி ஸ்ரீராமுனுவின் நடன நிகழ்ச்சி இடம்பெறவிருக்கிறது.

–காரைதீவு சகா








# சென்னையில் ஈழத்துக் கவிதை நூல்கள் வெளியீடு

ஈழத்து கவிதாயினிகளான ஷிபானா அஸீமின் 'காதலென்பது வேறொன்றுமில்லை', ரிஸ்ஹா முக்தாரின் 'ஆதியில் ஒரு காதல் இருந்தது' ஆகிய இரண்டு கவிதை நூல்கள், சென்னை புத்தகக் கண்காட்சியில் எமரால்டு பதிப்பகத்தின் ஊடாக, கவிஞர் அப்துல் ஹமீட் ஷேக் முஹம்மத்தால் (மனுஷ்ய புத்திரன்) புதன்கிழமை (23) வெளியிடப்பட்டது.

நக்கீரன் பத்திரிகையின் துணை ஆசிரியர் டி.எஸ். கௌதமனின் அணிந்துரையுடன் வெளியான இக்கவிதைத் தொகுதிகளின் முதற்பிரதிகளை உமா மகேஸ்வரி, குமரன், அர்ஷா, வினோதினி போன்றோர் பெற்றுக்கொண்டார்கள்.

–றாசிக் நபாயிஸ்



# ஒரே நாளில் இரண்டு இடங்களில்...

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 120 ஆவது வெளியீடாக வெளிவந்துள்ள சி. கிருஸ்ணபிரியனின் 'மூதன்னையின் பாடல்' கவிதை நூல் அறிமுக நிகழ்வு, நாளை ஞாயிற்றுக்கிழமை (27) கொழும்பிலும் வவுனியாவிலும் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 2.30 மணியளவில் இல. 167, குடியிருப்பு வீதி, பூந்தோட்டம் என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் வவுனியா பிராந்தியப் பணிமனையில் 'தோழர் சூடாமணி' அரங்கில் நடைபெறவுள்ள அறிமுக நிகழ்வுக்கு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் உபபீடாதிபதி ந.பார்த்தீபன் தலைமைதாங்க உள்ளதுடன், வரவேற்புரையை முகத்தான்குளம் விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் கி. செல்வராஜாவும் விமர்சன உரையை வவுனியா தெற்கு வலய தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் கவிஎழில் த. நிறைமதியும் கருத்துரையை பண்டாரவன்னியன் புத்தகசாலை நிர்வாகி திருமதி நிரூஜா கார்த்தீபனும் நன்றியுரையை ஓய்வுபெற்ற அதிபர் சு. டொன்பொஸ்கோவும் கவிதை வாசிப்பை திருமதி செ. அபிராமி, செல்வி அ. செல்வமனோகரி, செல்வி செ. அக்சிகா ஆகியோரும் ஆற்றவுள்ளனர்.

பி.ப. 4 மணியளவில், வெள்ளவத்தை இராமகிருஸ்ண மிசன் மண்டபத்தில் நடைபெறவுள்ள அறிமுக நிகழ்வுக்குப் பேராசிரியர் சி. சிவசேகரம் தலைமைதாங்க உள்ளதுடன், விமர்சன உரையை எழுத்தாளர் வசந்தி தயாபரனும் கருத்துரைகளை இளம் கவிஞர்களான த.வி. ரிஷாங்கன், க. ஆதித்தன் ஆகியோரும், ஏற்புரையை சி. கிருஸ்ணப்பிரியனும் நிகழ்ச்சித் தொகுப்பை சட்டத்தரணி இரா. ரஞ்சனும் நன்றியுரையை கி.சாருசுபத்ராவும் ஆற்றவுள்ளனர்.

–சபா தனுஜன்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் சனிக்கிழமை, 26 பெப்ரவரி 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.